Registered as a news paper. இலவசப் பிரதி பக்கங்கள்: பத்து விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்


ஒறிஜினல் கோலம் சாறி, பட்டு வேட்டிகள், கோலம் கூறை சாறிகள், பட்டு வேட்டி வகைகள் மற்றும் றெடிமெட் ஆடைகள், பல்வேறு ரக துணி வகைகள், பிளவுஸ் துணி வகைகள் யாவற்றுக்கும் வருகை தாருங்கள்

சிவகணேசன் ரெக்ஸ்ரைல்ஸ்

41, பெரிய கடை, யாழ்ப்பாணம். (சி-652) T.P.No. 222 2063

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 பங்குனி 10 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 முஹறம் 20 (24.03.2003) திங்கட்கிழமை இதழ் :172

# அமெரிக்காவுக்கு திடீர் பின்னடைவு; படையினர் பலர் கைதிகளாயினர்!

## முன்னேறிய இடங்களிலும் ஊடறுத்துத் தாக்குதலை ஈராக் ஆரம்பித்தது

**(பக்தாத்)**

**ஈராக்கிற்குள் நுழைந்து பக்தாத் நோக்கி முன்னேறும் முயற்சியில் ஈடுபட்ட அமெரிக்கப் படைகள், நேற்றைய போரில் எதிர்பாராத வகையில் பெரும் பின்னடைவைச் சந்தித்தன.**

**பக்தாத் நோக்கி முன்னேற முயன்ற படையினரில் ஆறு பேர், ஈராக்கிய இராணுவத்தின் தாக்குதலில் கொல்லப்பட்டிருப்பதை அமெரிக்கா உறுதி செய்தது. 14 பேர் படுகாயமடைந்திருப்பதாகவும் அமெரிக்கா மேலும் தெரிவித்தது.**

இதேவேளை - கொல்லப்பட்ட அமெரிக்கப் படையினரின் சடலங்களை அல் - ஜசிரா தொலைக் காட்சி நேற்றுப் பல தடவைகள் ஒளிபரப்பியது.

அத்தோடு - ஈராக்கியப் படைகளால் கைது செய்யப்பட்ட பெண் சிப்பாய் உட்பட ஐந்து அமெரிக்க மரைன் படையினரின் பேட்டிகளையும் அது ஒளிபரப்பியது.

நஸ்ரியா என்ற பகுதியிலேயே நேற்று தீவிரமான சண்டை நடந்ததாக ஈராக்கிலிருந்து வெளியான செய்திகள் தெரிவித்தன. (10 ஆம் பக்கம் பார்க்க)

பதுங்கு குழிக்குள் அடைக்கலம் தேடியுள்ள ஈராக்கியர்களையும், தாக்குதலில் காயமுற்ற ஈராக்கியச் சிறுவன் ஒருவனையும் (உள்ளே) படங்களில் காணலாம்.





போர்க் கைதிகளாகப் பிடிபட்ட அமெரிக்கப் படையினர்

### விண்ணாணம் விநாசியர்



மறுத்தவர் இப்ப மயங்கிறார்...!

## பிரதி சபாநாயகர் பதவி பெற எனக்குத் தகுதி இல்லையா?

### கேள்வி எழுப்புகிறார் ஆனந்தசங்கரி

தமிழர் விடுதலைக் கூட்டணியும் நானும் விடுதலைப் புலிகளுக்கு எதிரானவர்கள் அல்ல என, அக்கட்சியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி தெரிவித்தார்.

நேற்றுக் காலையில் யாழ்ப்பாணத்திலுள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியின் அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் பேசுகையில், விடுதலைப் புலிகளுக்கு நாம் உந்து சக்தியாக இருந்து ஆதரவு அளித்து வந்துள்ளோம். ஆனால், நாங்கள் அவர்களின் அங்கமல்ல. நாம் தந்தை செல்வாவின் வழியிலே செல்கின்றோம். சிலர் எம்மைத் தவறாக விமர்சிக்கிறார்கள். விடுதலைப் புலிகளின் நிலைப்பாடும் எங்களின் நிலைப்பாடும் ஒன்றாக இருந்தாலும் வழிமுறைகள் வேறாக உள்ளன. அவர்களுக்கு நாம் எந்தவகையிலும் முட்டுக்கட்டையல்ல. எப்பொழுதும் எமது ஒத்துழைப்பை வழங்குவோம்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ஐந்துசந்திப் பகுதியில் உத்தியோகப்பற்றற்ற ஊரடங்கு!

யாழ்ப்பாணம் ஐந்துசந்திப் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற மோதல்களையடுத்து அப்பகுதியில் பதற்றமான சூழல் நிலவிய போதும் - நேற்று அப்பகுதி சுமுக நிலைக்குத் திரும்பியது.

நேற்றுமுன்தினம் இரவு ஐந்து சந்திப் பகுதியில் இடம்பெற்ற மோதல்களில் பத்துப் பேர் காயமுற்று யாழ்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## உலகக்கிண்ணக் கிரிக்கெட்; அவுஸ்திரேலிய அணி வெற்றி



தென்னாபிரிக்காவின் ஜொகன்னஸ்பேர்க் மைதானத்தில் நேற்று நடைபெற்ற பரபரப்பான உலகக்கிண்ண கிரிக்கெட் இறுதியாட்டத்தில், அவுஸ்திரேலிய அணி வெற்றிபெற்று தொடர்ந்து இரண்டாவது தடவையாகவும் உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றியது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணித் தலைவர் கங்கூலி, அவுஸ்திரேலியாவைத் துடுப்பெடுத்தாட அழைத்தார். அவுஸ்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## வலயக் கல்வி அலுவலகங்கள் முன் இன்றுமுதல் தொண்டராசிரியர் மறியல்

நிரந்தர நியமனம் வழங்கக் கோரி தொண்டர் ஆசிரியர்கள் இன்று முதல் வட-கிழக்கு மாகாணம் தழுவிய ரீதியில் வலயக்கல்விப் பணிமனைகள் முன்பாக மறியற் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

வட - கிழக்கு மாகாணத்திலுள்ள வலயக் கல்விப் பணிமனைகளுக்கு முன்பாக, இன்று காலை 7 மணிக்கு இந்த மறியற் போராட்டங்கள் ஆரம்பமாகும். இந்த மறியற் போராட்டத்தில் சகல தொண்டர் ஆசிரியர்களையும் பங்கேற்குமாறு யாழ்.மாவட்ட (10 ஆம் பக்கம் பார்க்க)

## நான்கு சீன மாலுமிகள் சடலங்கள் குடத்தனையில் கரையொதுங்கின

முல்லைத்தீவுக் கடலில் மூழ்கடிக்கப்பட்ட, சீன மீன்பிடிப் படகிலிருந்து காணாமற்போன நான்கு மாலுமிகளின் சடலங்கள், வடமராட்சிக் கிழக்குக் கடற்பகுதியில் கரையொதுங்கின.

மணற்காடு, குடத்தனை கடற்கரைப் பகுதிகளில் கரையொதுங்கிய நான்கு மாலுமிகளின் சடலங்களையும் படையினர் மீட்டு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் நேற்று ஒப்படைத்தனர்.

பருத்தித்துறை வைத்தியசாலையில் சடலங்களைப் பேணுவதற்கான குளிரூட்டி வசதிகள் இல்லாமையால் நான்கு சடலங்களும் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டன. (10 ஆம் பக்கம் பார்க்க)

## வெளிநாட்டு ராணுவ உதவி பெற்று படைச் சமநிலை பற்றிப் பேசலாமா?

### கேள்வி எழுப்புகிறார் அன்ரன் பாலசிங்கம்



இலங்கை அரசாங்கம், இந்தியா, அமெரிக்கா போன்ற நாடுகளிடம் இராணுவ உதவிகளைத் தொடர்ந்து பெற்றுக்கொண்டிருக்கும்போது, இராணுவச் சமநிலை எவ்வாறு சாத்தியமாகும் என்று ஹொங்கோனில் வைத்து கொழும்புச் செய்தியாளர் லசந்த விக்கிரமதுங்கவுக்கு வழங்கிய பேட்டியில் அன்ரன் பாலசிங்கம் கேள்வி எழுப்பியுள்ளார்.

அந்தப் பேட்டியில் கலாநிதி பாலசிங்கம் மேலும் தெரிவித்திருப்பதாவது,

கிழக்குக் கடலில் கடற்படையால் மூழ்கடிக்கப்பட்ட கப்பலில் ஆயுதங்கள் இருக்கவில்லை. அது ஒரு எண்ணெய்த் தாங்கிக் கப்பல். அக்கப்பலில் சிறிய ரகத் துப்பாக்கி ஒன்று மட்டுமே இருந்தது.

ஜே.வி.பி (10 ஆம் பக்கம் பார்க்க)

SERENDIB AIRLINE

யாழ்ப்பாணத்தில் இருந்து வெள்ளவத்தை வரையும் அழையுங்கள்

021-2223916, 0777-517019, 01-505632, 074-612656, 01-390128.

(சி-626)

# மீள்குடியமர்வு கொடுப்பனவில் முறைகேடுகள்;
# தகவல் தரக் கோருகின்றார் அரசாங்க அதிபர்

(யாழ்ப்பாணம்)

மீள்குடியமர்வுக் கொடுப்பனவாக 25 ஆயிரம் ரூபா வழங்குவதில் சீர்கேடுகள் அல்லது முறையீனங்கள் இடம்பெற்றிருந்தால் மற்றும் இக்கொடுப்பனவுக்கு உரித்துடைய குடும்பங்களுக்கு, இக் கொடுப்பனவு மறுக்கப்பட்டால் அதனை எழுத்தில் அறிவிக்குமாறு, யாழ். அரச அதிபர் பத்திரிகைகள் வாயிலாக விடுத்த செய்திக்குறிப்பொன்றில தெரிவித்துள்ளார்.

புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தான 22.03.2002 ஆம் திகதிக்குப் பின்னர் தமது முன்னயை இருப்பிடங்களில் மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கு மாத வருமானம் 2,500 இற்கு மேற்படாது இருப்பின், மீள்குடியமர்வுக் கொடுப்பனவாக 25 ஆயிரம் ரூபா வங்கிக் கணக்கினூடாக வழங்கப்பட்டு வருகின்றது.

போரினால் குடும்பத் தலைவரை இழந்த குடும்பங்களுக்கு இக் கொடுப்பனவில் முன்னுரிமை வழங்கப்படுகிறது.

கிராமிய புனர்வாழ்வுக் குழுவினால் விதந்துரைக்கப்பட்டு, மீள்குடியமர்வுக் கொடுப்பனவுகளுக்கு உரித்துள்ள குடும்பங்கள் மீது முறைப்பாடில்லாதிருப்பின், பிரதேச செயலரினால் சிபார்சு செய்யப்பட்டு எனக்கு அனுப்பிவைக்கப்படும் குடும்பங்களுக்கு இக்கொடுப்பனவு 'நிகொட்' அலுவலகத்தினால் வங்கிக்கு அனுப்பிவைக்கப்படுகின்றது என்று அந்த செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இலக்கத் தகடுகள் விநியோகம்

வலிகாமம் மேற்கு, வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபைகளின் தலைமை அலுவலகங்கள் மற்றும் உப அலுவலகங்களில் 2003 ஆம் ஆண்டுக்கான துவிச்சக்கர வண்டி, மாட்டுவண்டி ஆகியவற்றுக்கான இலக்கத்தகடுகள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

அத்துடன் வளர்ப்பு நாய்களுக்குமான இலக்கத்தகடுகளும் வழங்கப்படுவதாக இப்பிரதேச சபைகளின் செயலாளர் மற்றும் பொறுப்பதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (100)

# உடுத்துறையில் புதிதாக துயிலுமில்லம் அமைப்பு

(சரசாலை)

வடமராட்சி கிழக்கு, உடுத்துறைப் பகுதியில் நேற்றுமுன்தினம் காலை 10.30 மணியளவில் மாவீரர் துயிலும் இல்லம் திறந்துவைக்கப்பட்டது.

இந்நிகழ்விற்கு, மாவீரர் துயிலும் இல்லப் பொறுப்பாளர் அர்ச்சனா தலைமை தாங்கினார். பொது ஈகச்சுடரினை வடமராட்சி கிழக்கு கடற்புலிகளின் பொறுப்பாளர் தீபன் ஏற்றினார். மாவீரர் பணிமனையின் பொறுப்பாளர் பொன்.தியாகம் தேசியக்கொடியை ஏற்றினார்.

இதேவேளை, கடலில் காவியமான கப்பல் கப்டன் சிலம்பரசன் (வேலாயுதபிள்ளை ஜெயரஞ்சன் - ஆழியவளை, வடமராட்சி) என்ற மாவீரரின் திருவுருவப்படம் தாங்கிய ஊர்தியும் அவரது இல்லத்திலிருந்து எடுத்துவரப்பட்டு, உடுத்துறை மாவீரர் துயிலும் இல்லத்தில் நினைவுக்கல் நாட்டப்பட்டது.

# சுப்ரமணியம் பூங்காவில் படைமுகாம்; கொமன்வெல்த் குழுவினரிடம் புகார்!

உத்தியோகபூர்வ விஜயமாக யாழ்ப்பாணம் வந்துள்ள பொது நலவாய அமைப்பின் (கொமன்வெல்த்) பிரதிநிதிகள், நேற்றுமுன்தினம் யாழ். அரசசார்பற்ற அமைப்புக்களின் பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இக்கலந்துரையாடலில், சமாதானம் என்ற கருப்பொருளை எவ்வாறு மாணவர் சமுதாயத்துக்குப் புகட்டுவது என்றும், உயர் பாதுகாப்பு வலயங்களால் ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பாகவும், சுப்ரமணியம் பூங்காவில் அமையவிருக்கும் இராணுவ முகாம தொடர்பான மக்களின் குற்றச்சாட்டுப் பற்றியும் கலந்துரையாடப்பட்டது.

அத்துடன், மக்களின் கருத்துக்களைச் சர்வதேச ரீதியில் எவ்வாறு எடுத்துச் சொல்லலாம் என்பது பற்றியும், பல்கலைக்கழகத்தில் வழங்கப்படும் சான்றிதழ் முறையை மாற்றி, அவற்றை தொழில் வாய்ப்புக்கேற்ப வழங்குவது தொடர்பாகவும், மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பாகவும் இக்கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது.

இக்கலந்துரையாடலில், பொது நலவாய அமைப்பின் பிரதிநிதிகளான றிச்சாட் கொன்ரே, ஆர்.பி. சூடீன், எஸ்.சர்புடீன் வெட்கோல் ஆகியோருடன் அரச சார்பற்ற அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர். (சு)

# ஆரம்ப சுகாதார நிலையம் வல்வையில் திறந்துவைப்பு

(வடமராட்சி கிழக்கு)

வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்தினால் நிர்மாணிக்கப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமும், பாக்கு நீரிணையை முதன்முதல் நீந்திக்கடந்த நீச்சல் வீரர் அமரர் மு.நவரத்தினசாமி நினைவுப் பேருந்து நிலையமும் அண்மையில் திறந்து வைக்கப்பட்டன.

ஆரம்ப சுகாதார நிலையத்தை ஐக்கிய நாடுகள் ஸ்தானிகராலய வதிவிடப் பிரதிநிதி திருமதி மொறின் மோஹனும், நவரத்தினசாமி நினைவுப் பேருந்து நிலையத்தை வல்வெட்டித்துறை மாவட்ட வைத்திய சாலை வைத்திய அதிகாரி டாக்டர் க.மயிலேறும்பெருமாளும் திறந்து வைத்தனர்.

இவ்விழா, யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் தலைமையில் நடைபெற்றது. சிறப்பு விருந்தினர்களாக பருத்தித்துறை பிரதேச செயலர் ஆ.சிவசுவாமி, கரவெட்டி பிரதேச செயலர் க.கனகரத்தினம் ஆகியோர் கலந்துகொண்டனர். (17)

## பரந்தன் - குமாரபுரத்தில்
# வெடிபொருட்களால் மக்கள் மீளக்குடியமர முடியவில்லை

(கிளிநொச்சி)

சத்ஜெய இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்து வேறு இடங்களில் தங்கியிருக்கும் பரந்தன் குமாரபுரம் பகுதி மக்கள் அங்கு மீண்டும் குடியமர முடியாத நிலையில் உள்ளனர்.

பரந்தன் குமாரபுரம் ஒன்பதாம் ஒழுங்கை மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் இராணுவத்தால் அமைக்கப்பட்ட பாரிய மண் அரண்களும் மற்றும் மிதிவெடிகள், கண்ணி வெடிகள் அகற்றப்படாத காரணத்தால் இப்பகுதியில் மக்கள் மீளக்குடியமரமுடியாதநிலை ஏற்பட்டுள்ளது. (108)

## சீருடைத் துணி பெறுவதில் மாணவர்கள்சிரமம்

பாடசாலை மாணவர்களுக்கான சீருடைத்துணி பெறுவதில், மீளக்குடியமர்ந்த மாணவர்கள், பல கஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

அண்மையில் மீளக்குடியமர்ந்த மாணவர்கள் - இடம்பெயர்ந்தபோது கல்விகற்ற பாடசாலையில் சீருடைத்துணி பெறாததை உறுதிப்படுத்தி, அப்பாடசாலை அதிபரிடமிருந்து உறுதிப்படுத்தப்பட்ட கடிதத்தைப் பெற்றுவருமாறு கூறப்படுகிறது.

இதனால், பல மாணர்வகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (118)

# வீதி விபத்துக்களில் மூவர் காயமுற்றனர்

(யாழ்ப்பாணம்)

நேற்றைய தினம் வெவ்வேறு விபத்துக்களில் காயமடைந்த நிலையில் 3 பேர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

ஏ- 9 வீதியூடாக, பரந்தனுக்கு மோட்டார் சைக்கிளில் சென்ற வேளை- வீதிக்குக் குறுக்கே சென்ற நாயுடன் மோதியதில் தடுமாறி விழுந்து படுகாயமடைந்த மிருசுவிலைச் சேர்ந்த யோகராசா (வயது 42) என்பவரும், ஏ- 9 வீதியூடாக மோட்டார் சைக்கிளில் பிரயாணித்த போது எதிரே வந்த காருடன் மோதியதில் படுகாயமடைந்த கிளிநொச்சி, உருத்திரபுரத்தைச் சேர்ந்த ந.அன்ரனி (வயது 29) என்பவரும்,

யாழ்ப்பாணம் பிறவுண் வீதியூடாக மோட்டார் சைக்கிளில் சென்ற போது, வீதியில் இருந்த பள்ளத்தை அவதானியாது அதில் வீழ்ந்து காயமடைந்த வே.பக்திகாந்தன் என்பவருமே யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

# மண்ணெண்ணெய் ஊற்றி யுவதியின் மீது தீவைப்பு
## உடுப்பிட்டியில் நடந்த கோரச்சம்பவம்

உடலில் தீக்காயங்களுடன் இளம் யுவதி ஒருவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் மாலை 6.30 மணியளவில் மேற்படி யுவதியின் வீட்டுக் கதவைத் தட்டிய சிலர், அவர் மீது மண்ணெண்ணெயை ஊற்றித் தீ வைத்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

உடுப்பிட்டியைச் சேர்ந்த 17 வயதான யுவதியே உடலில் தீக்காயங்களுக்குள்ளாகி யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். இச்சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரியவருகின்றது.

காதல் தொடர்பாக எழுந்த பிரச்சினையே இதற்குக் காரணம் எனவும் கூறப்படுகின்றது. (111)

## சார்க் விளையாட்டு விழாவுக்கு இலங்கைக் குழு

மார்ச் 29 ஆம் திகதி தொடக்கம் ஏப்ரல் 7 ஆம் திகதிவரை பாகிஸ்தானில் நடைபெறவிருக்கும் சார்க் விளையாட்டு விழாவில் கலந்துகொள்ளும் பொருட்டு, தமயந்தி தர்ஷா தலைமையிலான இலங்கைக்குழு எதிர்வரும் 29 ஆம் திகதி இலங்கையிலிருந்து புறப்பட்டுச் செல்லவுள்ளது.

இது தொடர்பாக பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபத்தில் ஒன்றுகூடல் நிகழ்வு ஒன்று விளையாட்டுத்துறை அமைச்சர் ஜோன்சன் பெர்னான்டோவுடன் இலங்கைக் குழு பங்குபற்றியிருந்தது. (சு)

# 12 அடிப்படைக் கற்கைநெறிகளை புறநிலைப் படிப்புகள் ஆரம்பிக்கும்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக புறநிலை பட்டப்படிப்புக்கள் அலகு 2003/2004 கல்வி ஆண்டில், 12 புதிய அடிப்படைக் கற்கை நெறிகளை அறிமுகப்படுத்தவுள்ளது.

வாரத்தில் சனி, ஞாயிறு ஆகிய இருதினங்களிலும் நடைபெறும் கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

சிறு தொழில் முகாமைத்துவம், தகவல் தொழில்நுட்பம், மனித வள முகாமைத்துவம், சந்தைப்படுத்தல் முகாமைத்துவம், சோதிடக் கலை, சூழல் முகாமைத்துவம், பொதுத்துறை கணக்கீடு, நிதி முகாமைத்துவம், கலைரசனை, சினிமா ரசனை, சிவாச்சாரியாரின் பங்கும் பணிகளும், தொழிற்சங்கவியல் ஆகிய கற்கைநெறிகளே புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. ஏற்கனவே 20 கற்கை நெறிகள் புறநிலைப் பட்டப் படிப்பு அலகினால் நடாத்தப்பட்டு வருகின்றன.

புறநிலைப்படிப்புகள் அலகினால் நடாத்தப்படும் கற்கைநெறிகளில், விரிவுரையாற்ற தகைமையுள்ள துறைசார்ந்தவர்களும் விண்ணப்பிக்கலாமென புறநிலைப் படிப்புகள் அலகின் இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (ச,சு)

# இன்றைய நாள் இனிய நாள்

**24-03-2003 - திங்கட்கிழமை**

| | |
|---|---|
| மேடம் | :- காரிய சித்தி, பணவரவு, பெரியோர் மதிப்பு, மனமகிழ்ச்சி, |
| இடபம் | :- கொடுக்கல் வாங்கல் பிணக்கு, குடும்ப மனஸ்தாபம், சிநேகிதருதவி, உறவினரால் கவலை |
| மிதுனம் | :- சத்துருவெற்றி, அதிகார சித்தி,மனப்பயம்,தொழில் சிறப்பு, பணவரவு. |
| கர்க்கடகம் | :- விஷபயம், ஊக்கமிகுதி, சரீரவாட்டம், பணமுடை. புத்தி சுகம். |

பிரபல சோதிடர்
எஸ்.குகநேசன்

| | |
|---|---|
| சிங்கம் | :- சத்துருவெற்றிதொழில் விருத்தி, நற்கீர்த்தி, அயலவர் உதவி. |
| கன்னி | :- வியாதி,பயனற்ற பிரயாசம்,வாகன சுகம், நன்மதிப்பு, |
| துலாம் | :- தாரசுகத் தடை, பொறாமை, ஏமாற்றம், புத்திரரால் கஷ்டம், தேகமெலிவு |
| விருச்சிகம் | :- தருமகாரிய சித்தி, சிநேக லாபம்,பொருள் விருத்தி, |
| தனு | :- காலில் ரோகம், மனப்பயம், தனித்த நிலை, வாகன லாபம், களஸ்திர மகிழ்ச்சி. |
| மகரம் | :- தாழ்ந்த நிலை, தேகமெலிவு, வீண்பழி, பிரயாணம், |
| கும்பம் | :- தனலாபம், இல்லச் சிறப்பு, காரியனுகூலம்,சரீர சுகம், பணவரவு. |
| மீனம் | :- பிரயாணக் கஷ்டம், ஆபரணலாபம்,சரீரசுகம், ஐஸ்வரியம், பொருள் விரவு. |

மலிவு விற்பனை
20% முதல் 50% வரை
புதுக்கணக்குப் போடவிருப்பதால்
பாடசாலை மாணவர்களுக்கான புத்தகங்கள், மருத்துவம், கணினி, பொறியியல், இந்திய பிரபல எழுத்தாளர்களின் நாவல்கள் போன்றன மலிவு விலையில் விற்பனையாகின்றது.
ஒருமுறை விஜயம் செய்யுங்கள். (சி-706)
ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்
212, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

ராஜா யாழ்ப்பாணம்.
இன்று முதல்
விஜய், ரீமாசென், வடிவேல் நடித்த
பகவதி
10.30, 2.30, 6.30 மட்டும்.
JACKIE CHAN
RUSH HOUR - 2
இரவு 9.30இற்கு மட்டும் (26 வரை) (சி-628)

நிறைஞ்சனாஸ் சங்கானை
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00(பு.நே.)
சத்யராஜ், சுவலட்சுமி நடித்த
ஆண்டான் அடிமை
வெள்ளி. சனி. ஞாயிறு இரவு 8.45 மணி காட்சி
HOLLOW MAN (சி-627)

## நாடும் நடப்பும்




# ஐந்துவருட அபிவிருத்தி திட்டங்கள்

# கிளிநொச்சி கூட்டத்தில் ஆராய்வு!

சிறான் அமைப்பினூடாக, வடக்கு-கிழக்கில் அடுத்த ஐந்து ஆண்டுகளில் இடம்பெறவிருக்கும் அபிவிருத்தித் திட்டங்கள் குறித்த நான்கு நாள் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

கிளிநொச்சியில் உள்ள தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன மண்டபத்தில் கடந்த 20 ஆம் திகதி ஆரம்பமாகி நேற்றுவரை இக் கலந்துரையாடல் நடந்தது.

முதல் நாள்- சுற்றுச்சூழல், சுகாதாரம் என்பன பற்றியும், உயர்பாதுகாப்பு வலயத்தில் மக்களை மீளக் குடியமர்த்துதல், உயர்பாதுகாப்பு வலயத்தில் உள்ள வீடுகளில் - மீள்குடியமர்வுக்கான நிதி உதவிகளை வழங்குதல், முன்னர் மீள்குடியமர்வுக்காக வழங்கப்பட்ட நிதி உதவியில் விடப்பட்ட தவறுகள் இனிமேல் இடம்பெறுவதைத் தடுத்தல் என்பன போன்ற பல விடயங்கள் ஆராயப்பட்டன.

அடுத்து நடந்த கலந்துரையாடலில் - கல்வி, புனரமைப்பு, நீர்ப்பாசனம், நீர் வழங்கல் தொடர்பாகவும் ஆராயப்பட்டன.

கல்வி சம்பந்தமான கலந்துரையாடலில் - தமிழீழக் கல்விக்கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன், யு.என்.எச்.சி.ஆர் வதிவிடப் பிரதிநிதி வெனிபுறுக் மற்றும் வலயக்கல்விப் பணிப்பாளர், தமிழீழ கல்விக் கழகத்தைச் சேர்ந்தவர்கள், கல்வி சம்பந்தப்பட்ட அரச சார்பற்ற பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

வீதி அபிவிருத்தி தொடர்பாக வீதி அபிவிருத்தி அதிகாரசபை பிரதிநிதிகளோடும், வடக்கு - கிழக்கு நீர்ப்பாசன திட்டங்கள் குறித்து நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரிகளுடனும் கலந்துரையாடப்பட்டது.

தொலைத் தொடர்பு வழங்குதல் தொடர்பாகவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் ஆராயப்பட்டது.

நான்கு நாள் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடல்களில், வடக்கு-கிழக்கில் உள்ள எட்டு மாவட்ட அரசாங்க அதிபர்கள் மற்றும் துறை சார்ந்த அதிகாரிகளும் பங்குபற்றினர்.

### 19.5 மில்லியன் டொலர் அமெரிக்கா உதவி செய்யும்

போரினால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளைப் புனரமைப்புப் செய்வதற்கான உதவியாக - இலங்கைக்கு 19.5 மில்லியன் டொலரை அமெரிக்கா வழங்கவுள்ளதாக, அமெரிக்காவின் தெற்காசிய விவகாரச் செயலாளர் கிறிஸ்ரினா றொக்கா தெரிவித்துள்ளார்.

# போதிய உணவுப்பொருள் கையிருப்பில் முண்டியடிக்க வேண்டாமென அறிவிப்பு

## கறுப்புச் சந்தைக்காரர் மீது சட்ட நடவடிக்கை

(கொழும்பு)

ஈராக் மீது அமெரிக்கா தாக்குதலைத் தொடங்கியதையடுத்து, எரிபொருள் மற்றும் உணவுப் பொருட்களுக்கான தட்டுப்பாடு ஏற்படும் என்ற அச்சம் நாடு முழுவதும் ஏற்பட்டுள்ளது.

போர் தொடங்கியதும் எரிபொருள் தட்டுப்பாடும், அதற்கான கேள்வியும் அதிகரித்திருந்தது. இந்த நிலையில், உணவுப் பொருட்களை - பொது மக்கள் அதிகளவில் வாங்கி வீடுகளில் களஞ்சியப்படுத்துவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த சில நாட்களாகப் பொது மக்கள் அதிகளவிலான பொருட்களை வாங்க முற்பட்டதால், முக்கிய வர்த்தகநிலையங்களில் நெருக்கடிகள் ஏற்பட்டிருப்பதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. நாடு முழுவதிலுமுள்ள கூட்டுறவு மொத்த விற்பனவு நிலையங்களில் - வாடிக்கையாளர்கள் கணிசமாக அதிகரித்திருப்பதாகவும், இதனால் நெருக்கடிகள் ஏற்பட்டிருப்பதாகவும் நிறுவனத்தின் தலைவர் தெரிவித்தார்.

கோதுமை மா, அரிசி உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களைக் கொள்வனவு செய்வதில் அதிக நாட்டம் காட்டுவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஆனால்- பொதுமக்கள் உணவுப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கு முண்டியடிக்க வேண்டிய அவசியமில்லை என்றும், வீடுகளில் பாவனைப் பொருட்களைச் சேமிக்க வேண்டியளவுக்கு- நிலைமை இறுக்கமாக இல்லை என்றும், வாழ்க்கைச் செலவு தொடர்பான உபகுழுவின் தலைவரான கே.எச்.ஜே.விஜேதாஸ் தெரிவித்துள்ளார்.

நாட்டில் மூன்று மாதங்களுக்குத் தேவையான உணவுப்பொருட்கள் கையிருப்பில் இருப்பதாகவும், இதனால் உணவுப்பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படாது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

உணவுப்பொருட்களைப் பதுக்கி வைத்து - செயற்கையான தட்டுப்பாட்டை உருவாக்கி, கறுப்புச் சந்தைக்குக் காரணமாகவிருக்கும் தனியார் வர்த்தகர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் இவர் மேலும் தெரிவித்தார்.

# வழக்குகளை மாற்றும் மனு சட்டமா அதிபரிடம் கையளிப்பு

களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 22 தமிழ் அரசியல் கைதிகள், தமது வழக்குகளை வட - கிழக்குப் பகுதிகளிலுள்ள சிறைச்சாலைகளுக்கு மாற்றுமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

சட்டத்தரணியும், நாடாளுமன்ற உறுப்பினருமான அப்பாத்துரை விநாயகமூர்த்தி மூலமே இந்த மனு - சட்டமா அதிபர் கமலசபேசனுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

தம்மை உடன் விடுதலை செய்யுமாறு அல்லது தமது வழக்குகளை வட - கிழக்குப் பகுதிகளிலுள்ள நீதிமன்றங்களுக்கு மாற்றுமாறும், வழக்குகளைத் துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறும் கோரி இருவாரங்களாக உண்ணாவிரதப் போராட்டத்தை இக்கைதிகள் மேற்கொண்டிருந்தனர்.

வழக்குகளைத் துரிதப்படுத்தவும், வழக்குகளை வட - கிழக்குப் பகுதிகளிலுள்ள நீதிமன்றங்களுக்கு மாற்றவும் சட்டமா அதிபர் இணக்கம் தெரிவித்ததையடுத்து - தமிழ் அரசியற்கைதிகளின் உண்ணாவிரதம் கைவிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### -கட்டுநாயக்க விமான நிலையத்தின்-

# பணிப்பாளரை வீட்டுக்கு அனுப்பும் ஜனாதிபதியின் உத்தரவு நிராகரிப்பு!

(கொழும்பு)

கட்டுநாயக்க விமானநிலைய, விமானசேவைகள் பணிப்பாளர் காமினி அபேரட்ணவை கட்டாய ஓய்வில் அனுப்பிவிட்டு, அவர் மீது பக்கச்சார்பற்ற விசாரணைகளை நடத்துமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க - பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவுக்கு விடுத்திருந்த உத்தரவை அமைச்சரவை நிராகரித்துள்ளது.

விமானநிலைய, விமான சேவைப் பணிப்பாளர் காமினி அபேரட்ண- விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்களுக்கு விமானப் பயணங்களை மேற்கொள்ள உதவியதாகவும், புலிகளின் பொதிகளை ஹெலிகொப்ரர்கள் மூலம் வன்னிக்கு அனுப்பி வைத்ததாகவும், புலிகளின் சமாதானச் செயலகப் பொறுப்பாளர் புலித்தேவனுக்கு உத்தியோகபூர்வ இல்லத்தில் தங்க இடமளித்ததாகவும் ஜனாதிபதி சந்திரிகா குற்றம் சாட்டியுள்ளார்.

இது தொடர்பாகப் பக்கச்சார்பற்ற விசாரணைகளை நடத்துமாறும், உடனடியாக காமினி அபேரட்ணவை கட்டாய ஓய்வில் அனுப்புமாறும் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாராப்பனவுக்கு - ஜனாதிபதி சந்திரிகா பணிப்புரை விடுத்திருந்தார்.

### சமாதான முயற்சிக்கு பொலிஸ் ஆதரவு

கடந்த இருபது வருடங்களாக நாட்டில் நிலவிய அச்சம் நிறைந்த சூழல் தணிந்து, சமாதானச் சூழல் ஏற்பட்டுள்ளதாகவும், இதற்குப் பொலிஸார் முழுமையான ஆதரவையும் வழங்குவர் என்றும் பொலிஸ்மா அதிபர் ஏ.ஈ.ஆனந்தராஜா தெரிவித்தார்.

கல்முனையில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே - அவர் சமாதான முயற்சிக்கான பொலிஸாரின் ஆதரவை வெளிப்படுத்தியுள்ளார்.

# வட-கிழக்கு மாகாணத்திற்கு வெளிநாட்டு உதவிகளா?

### முதலமைச்சர்கள் - மாநாட்டில் கேள்வி

எதிர்க்கட்சிகளின் வசமுள்ள மாகாணசபைகளுக்கு ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் போதிய நிதியை வழங்காத அதேவேளை, வட - கிழக்கு மாகாணத்துக்கு மட்டும் வெளிநாட்டு உதவிகளைப் பெருமளவில் பெற்றுக்கொடுப்பதாக முதலமைச்சர்கள் மாநாட்டில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

மாகாண முதலமைச்சர்களின் மாநாடு கதிர்காமத்தில் நடைபெற்றபோதே, அதில் கலந்துகொண்ட வடமேல் மாகாண முதலமைச்சர் பேர்ட்டி பிறேமலால் திஸநாயக்க மேற்கண்டவாறுகுற்றஞ்சாட்டினார்.

இந்த மாநாட்டில் கலந்துகொண்ட முதலமைச்சர்கள் - பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஆட்சியிலுள்ள மாகாணசபைகளுக்கு - மத்திய அரசாங்கம் போதியநிதியை வழங்குவதில்லை எனச்சுட்டிக்காட்டினர்.

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் ஆட்சியில் இருந்தபோது, மாகாணசபைகளுக்கு 700 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டதாகவும், ஆனால் இப்போது 70 மில்லியன் ரூபாவே வழங்கப்படுவதாகவும் இம்மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது.

# 'சினி யாத்ரா' திரைப்பட விழா பார்வைக்கு வரும் படங்கள்

இக்கதை கீழ் மத்தியதர வர்க்கப் பின்னணியில் பின்னப்பட்டதாகும். தர்மே என்னும் இளைஞன் வேலையற்றிருக்கும் நந்தா என்னும் தன்மனைவியோடு, பொருளாதாரக்

### சந்தகின்னரி

கஷ்டம் மிகுந்த பரிதாபத்துக்குரிய வாழ்க்கையுள் தள்ளப்படுகிறான். ஏற்கனவே நாலு பிள்ளைகளின் தகப்பனான அவன், மனைவி மீண்டும் கர்ப்பிணியாக இருப்பதை அறிந்து, அவளுடைய செயல்தான் குடும்பம் மேலும் மேலும் ஏழ்மை நிலைக்குத் தள்ளப்படக்காரணம் என்பதுபோல் அவளை அடிக்கிறான்.

சுற்றுவட்டாரம் முழுக்க கடனாளியான தர்மே - போதாதற்கு மதுவுக்கும் அடிமையானதால், நோய்வாய்ப்பட்ட வயதுபோன அவனது தயாருடன், ஏழு பேர்கொண்ட அவனது குடும்பம் சொல்லொணாத் துன்பத்துள் வீழ்கிறது. அவனது அற்ப வருமானத்தால் குடும்பத் தேவையின் அழுத்தங்களை தாக்குப்பிடிக்க முடி


நாயகி-சுவர்ணா

யாததால், குடும்ப அமைதி கெடுகிறது. அதன் தொடராக அவன் மனைவியோடு சதா போடும் சண்டை - அவர்களுடைய வாழ்க்கையை இறுக வைக்கிறது. பொருளாதாரக் கஷ்டங்கள் பற்றிய கதைகள், தேவைகள், களைப்பு ஆகியனவே அவன் வீட்டின் அற்ப இடைவெளியை நிரப்புவனவாய் உள்ளன.

மனைவியை அடித்த அடுத்த நாள், வீட்டின் அவலமான நிலைமையை இணக்கப்பாட்டுக்குக் கொண்டுவர, தனது சம்பளத்தில் எஞ்சியுள்ளவை போதாதென்பதை தர்மே அறிகிறான். தான் எடுக்க முயன்ற முதல் நடவடிக்கையே தோல்வியுற, துன்புற்ற மனநிலையில், உன்மத்தம் கொண்டவனாய் தண்ணீர்த் தொட்டியின் உச்சியில் இருந்து பாய்ந்து இறந்து போகிறான்.

அவனோடு நந்தா வாழ்ந்த வாழ்க்கை மிகப் பயங்கரமானதாக இருந்தபோதும், அவன் இறந்து போனான் என்றதை அறிந்த மறுகணமே - அவள் தனது கையறு நிலைப்பட்ட தனிமையையும், வாழ்தலிலிருந்து ஈவிரக்கமற்ற முறையில் அகற்றப்பட்டுவிட்டதாகவும் உணர்கிறாள். அவளுக்கு அதை நம்பவோ, அதனோடு சமரசம் செய்து கொள்ளவோ முடியவில்லை. சத்தமிட்டு அவனோடு சண்டையிடுவதே அவர்கள் வாழ்க்கையை ஒன்றிணைக்கிற ஒரேயொரு தொடர்பாடலாகப் பின்னணி தந்தது. ஒருவரோடு ஒருவருக்கிருந்த கசப்புணர்வே அவர்களின் பொருளாதாரக் கஷ்டங்களுக்கு விடையளிப்பதாய் இருந்தது.

அவன் - அவளின் வாழ்க்கையின் ஒரு பகுதியாக இருந்தான். அவனை, அவளின் உடல் ரீதியான உறவிலிருந்து காப்பாற்றிய அவன் மரணம். அவளை அதல பாதாளத்திற்குத் தள்ளுவதைத் தவிர்த்தது. அவளுடைய சமத்தன்மை முற்று முழுதாக அவளிடமிருந்து சரிந்து போயிற்று. அவளோ, அவனோ உணர்வு ரீதியாகவோ, ஆத்மார்த்த ரீதியாகவோ விவாக பந்தத்தில் கட்டுப்பட்டதில்லை.

இறுதியாக, அவன் அடக்கஞ் செய்யப்பட்டு, அவனது பௌதீக வாழ்க்கையின் அடையாளம் எல்லாம் அற்றுப் போன பின்னர் - அவள் உடல் ரீதியாகவும், உணர்வு ரீதியாகவும் தன்னையே இழந்து, தான் இல்லாமையான நிலையால் விரக்தியுற்றுக் களைப்படைகிறாள். மிகுந்த பொருளாதார அழுத்தமும், ஒழுக்கச் சீர்கேடும் அவர்கள் வாழ்க்கையில் புகுந்து, விவாக பந்தத்தினாலே பெற்றோர் என்ற வகையிலோ, அவர்களின் ஆத்மார்த்த இணைவு நடைபெறாமல் செய்து விடுகிறது.

தர்மேயும், நந்தாவும் வழமைப் பிரகாரம் திருமணம் செய்தவர்களேயொழிய - திருமண ரீதியாகவோ,


சந்தகின்னரியில் ஒரு காட்சி

ஆத்மார்த்த ரீதியாகவோ ஒன்றிணையவில்லை. தர்மேயின் உடல் ரீதியான தொடர்பு இழக்கப்பட்டதன் பின், அவனோடு இணைந்திருந்த கலியாண வாழ்க்கையில் எந்தவிதமான பற்றுதலையும் கொண்டிராத அவள், இதற்கு மேலும் ஆத்மார்த்த ரீதியாக அவனை - அவள், வாழ்க்கையில் அனுமதித்து இடந்தரப்போவது என்பது நடைபெறப்போவதில்லை.

இந்த நாட்டின் அரசியல் அரங்குகளில் கதைக்கப்படும், விடயங்களில் ஒன்றாக - இலங்கைச் சமூகத்துப் பெண்கள் அடக்குமுறைக்குள்ளாக்கப்படுவது இருப்பதில்லை. இது பிரதான சமூகப் பிரச்சினையாக இருந்தாலும், மிகமுக்கிய தீர்வுக்குரிய பாராளுமன்றத் தேர்தல்கள் - இன்னும் முக்கிய அரசியல் சமூகப்பிரச்சினைகள் தொடர்புபட்ட விடயங்களில் செல்வாக்கு குன்றியதாகவே இருக்கிறது. பெண்கள் விடுதலை தொடர்பாகப் புதிய தரிசனத்தோடு தொடங்கும் இப்படம், பொதுவாகப் பெண்களை வழமைக்குப் புறம்பான புதிய கோணத்தில் தம்மை, பார்க்கத் தூண்டுகிறது.

# கடும் பாலைவனச் சமர் நேற்று ஆரம்பமாகியது

## பக்தாத்திலிருந்து 160 கிலோமீற்றர் தொலைவில் அனல் பறக்கிறது

ஈராக் தலைநகர் பக்தாத் நோக்கி முன்னேறிவரும் அமெரிக்க - பிரிட்டிஷ் படைகளுக்கும் ஈராக் படைகளுக்குமிடையே - தென் பக்தாத்திலிருந்து 160 கிலோ மீற்றர்கள் தொலைவிலுள்ள பாலைவனப் பகுதியில் கடும் சண்டை மூண்டுள்ளது.

இருதரப்பும் நேருக்கு நேராக - கைகலப்புச் சண்டையில் ஈடுபட்டு வருகின்றன.




பஸ்ராவிலிருந்து மூன்று மைல் நீளமான படையணியாகப் பரந்து சென்றுகொண்டிருக்கும் அமெரிக்கப் படைகள் - நேற்று மதியமளவில் நஜாவ் என்ற சிறு நகரை அண்மித்திருப்பதாக அறிவித்தன.



இதேவேளை - தொடரும் விமானக் குண்டு வீச்சுக்களாலும், ஏவுகணைத் தாக்குதல்களாலும் பக்தாத்தின் பெரும் பகுதி - மின்சாரத் தொடர்புகள் துண்டிக்கப்பட்டு இருளில் மூழ்கிக் கிடக்கின்றது.

பக்தாத்தைப் பிடிப்பதென்பது இலகுவான காரியமல்ல எனக் கருத்து வெளியிட்டுள்ள அமெரிக்காவின் பென்ரகன் அதிகாரிகள், ஈராக் தலைமையை ஆட்டங்காணச் செய்யத் தம்மால் முடியுமெனத் தெரிவித்துள்ளனர்.

இது இவ்வாறிருக்க - வடக்கு ஈராக்கில், அல்கெய்டா அமைப்புடன் நெருங்கிய தொடர்புகளைக் கொண்ட அன்சார் அல்-இஸ்லாம் என்ற முஸ்லிம் அமைப்பின் நிலைகள் மீதும் அமெரிக்க விமானங்கள் குண்டுவீச ஆரம்பித்துள்ளன.

### ஏவுகணையால் வெடித்துச் சிதறிய பிரிட்டிஷ் விமானம்

(கட்டார்)

ஈராக் மீது தாக்குதல் நடாத்தி விட்டுத் திரும்பிக்கொண்டிருந்த - பிரிட்டனின் யுத்த விமானமொன்று - அமெரிக்க ஏவுகணையொன்றாலே தாக்கப்பட்டு - நடுவானில் வெடித்துச் சிதறியது.

தாக்கப்பட்ட விமானம் - ஈராக் எல்லைக்குச் சமீபமாகத் திரும்பிய போது - அமெரிக்காவின் பட்ரியாட் ஏவுகணை அதனைத் தாக்கியதாக பிரிட்டிஷ் படையதிகாரியான குருப் கப்டன் அல்லொக்லூட் தெரிவித்தார்.

இந்த விமானத்திலிருந்த சகல படையினரும் கொல்லப்பட்டுள்ளனர்.



வெளியேறிச் செல்கையில் உதவி கோரும் ஈராக்கிய பெண் ஒருவர்.

# குவைத்தில் அமெரிக்கப் படைகள் மீது அந்நாட்டுச் சிப்பாயே கிரனைட் வீசினார்

## ஒருவர் பலி, 12 படையினர் படுகாயம்



காயமடைந்தோரைக் காவிச்செல்லும் அமெரிக்கத் துருப்புக்கள்.

வடக்குக் குவைத்தில் - தனது நாட்டுப் படையினர் மீதே கைக் குண்டுத் தாக்குதலை நடத்திய அமெரிக்கப் படைவீரர் ஒருவர் கைதானார்.

அமெரிக்காவின் விமான வழியே தரையிறங்கும் துருப்புக்களின் பென்சில்வெனியா முகாமில் நடந்த இச்சம்பவத்தில் - இரண்டு கைக் குண்டுகள் வீசப்பட்டதில் - ஒரு அமெரிக்கச் சிப்பாய் கொல்லப்பட்டதுடன் மேலும் 12 பேர் படுகாயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் - அமெரிக்கப் படையினரிடையே பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. சம்பந்தப்பட்ட அமெரிக்கச் சிப்பாய் எதற்காகத் தனது நாட்டவரையே தாக்கினார் என்பது பற்றிய விசாரணைகள் நடந்து வருகின்றன.

இத்தாக்குதல் பற்றிக் கருத்துத் தெரிவித்த அமெரிக்க இராணுவப் பேச்சாளர் மாக்ஸ் புளூமென்பெல்ட்- இது ஆத்திரத்தினால் அல்லது எரிச்சலினால் நடத்தப்பட்டிருக்கலாம் எனக்கூறினார்.

உலகவலம்

# ஈராக் போர்க்களம்



ஈராக் எல்லைக்குள் ஊடுருவிச் செல்லும் அமெரிக்கத் துருப்புக்களுக்கான விநியோகத்தில் ஈடுபட்டுள்ள இராணுவ வாகனங்கள்.



தலைநகர் பக்தாத்தைக் காப்பதில் ஈராக்கிய படைகளின் உற்சாகம் குறையவில்லை.

# நள்ளிரவில் விமானக் குண்டுவீச்சு; மழையென குரூஸ் ஏவுகணைகள்!

## வட-கிழக்கு ஈராக்கில் 150 பொதுமக்கள் பலி



பெட்டி படுக்கையுடன் இடம்பெயரும் ஈராக்கிய மக்கள்.

(பக்தாத்)

வட - கிழக்கு ஈராக்கில் - அமெரிக்க விமானங்கள் நடாத்திய கடுமையான குண்டுவீச்சில் 150 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

அன்சார் அல் - இஸ்லாம் என்ற முஸ்லிம் அமைப்பினரின் செல்வாக்குள்ள பகுதிகள் மீது - நள்ளிரவு வேளை அமெரிக்க விமானங்கள் இத்தாக்குதலை நடாத்தின.

இரண்டு இரண்டாக போடப்பட்ட குண்டுகளால் அப்பகுதி ஒறேஞ் நிற ஒளிப்பிழம்பானதாக சம்பவத்தை நேரில் கண்டவர் தெரிவித்தார்.

இதேவேளை - 70 இற்கும் அதிகமான குரூஸ் ஏவுகணைகளும் இப்பகுதியில் வீழ்ந்தன.

இது இவ்வாறிருக்க - குர்திஷ் தேசப்பற்றாளர் அமைப்பு (பி.யூ.கே) அமெரிக்கப் படைகளுடன் இணைந்து ஈராக்கியர்களுடன் போரிடலாம் எனவும் -

இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கு முகமாகவே குர்திஷ் தேசப்பற்றாளர் அமைப்பின் சோதனைச் சாவடியொன்றில் - தற்கொலைத் தாக்குதல் நடாத்தப்பட்டதாகவும் தெரிய வருகின்றது.



ஈராக்கில் அமெரிக்க டாங்கிகள் முன்னேற, அதைப்பற்றிக் கவலைப்படாது மெத்தைகள் சுமந்துசெல்லும் ஈராக்கியர்.

# நாய் எங்கே? நாம் எங்கே?



சூரியக்கதிர் - 1 இராணுவ நடவடிக்கையால் சுன்னாகத்திலிருந்து குடும்பத்தோடு செல்லையர் நெல்லியடிக்கு அவலப்பட்டு, இடம்பெயர்ந்து பதினைந்தாவது நாள் அதிகாலை! பாயில் எழுந்த மர்ந்துகொண்டு கண்ணீரை ஆறாகப் பெருக்கினார் செல்லையர். பக்கத்தில் படுத்திருந்த மகன் ரகுவை எழுப்பினார். அவன் "என்ன அப்பா?" என்று கேட்டபோது, எங்கள் நாய் அங்கே செத்து விட்டதடா!" என்று தேம்பினார். "எப்படித் தெரியும்?" ரகு கேட்டான். "அது கால்களை எறிந்து படுத்த வண்ணம் பரிதாபமாகக் கண்களை மூடுவதாகக் கொஞ்சம் முன்பு கனவு கண்டேன்." "என்ன செய்வது அப்பா? நீங்கள் சொன்னபடி 20 மைல் சைக்கிள் ஓடிச் சாப்பாடும் போட்டு, அதைப் பிடித்துக் கட்டிக்கொண்டுவர வெகுநேரம் முயன்றேன். அது பறித்துப் பறித்தோடி வளவுக்குள் புகுந்துகொண்டது. ஒன்றுஞ்செய்ய முடியாமல்தான் விட்டு வந்தேன்" என்றான் ரகு. "நான் போயிருந்தால் சம்மதித்து வந்திருக்கும்!" என்று குமுறிய செல்லையரிடம், "அப்பா அழாதீர்கள்!" என்ற ரகு தொடர்ந்தான் - "எல்லாச் சனங்களுமே இடம்பெயர்ந்து, ஆயிரம் அவலங்கள்படும்போது நாங்கள் ஒரு நாய்க்காக அழுதால் சிரிக்குங்கள் அப்பா."

## பஞ்சாட்சரம் கதைகள் 4

செல்லையர் அழுகை உள்ளடங்கிற்று. அவர் பள்ளியில் பயின்ற காலத்தில் படித்த ஓர் ஆங்கிலக் கவிதை **(Fidelity)**. ஒரு சீமானும், அவரது அன்பு நாயும் தனிமை சூழ்ந்த ஒரு மலைப் பாதையில் வழமைபோல் உலாச்செல்கையில், சீமான் தற்செயலாகத் தடுக்குண்டு ஆழ்ந்த செங்குத்தான பள்ளத்துள் வீழ்ந்து விடுகிறார். நாயோ அந்தரித்து அங்கிங்காக ஓடி ஓடி ஊளையிடுகிறது. பல வாரங்களாகச் சீமானைக் காணவில்லையென்று தேடப்புறப்பட்டவர்கள், அந்த மலைப் பள்ளத்தில் ஒரு மனித எலும்புக்கூட்டையும், பக்கத்தில் ஒரு சிறிய மிருகத்தின் எலும்புக்கூட்டையும் காண்கின்றனர். "இது யதார்த்தமன்று வெறும் கற்பனாவாதக் கவிதை" என்று அன்று வாதிட்ட செல்லையர் மனம் - இன்று அதன் யதார்த்தத் தன்மையை ஒப்புக்கொள்கிறது. 6 மாதங்கழித்து ஊர்மீண்ட சனத்தோடு சனமாகத் தம்வீடு சேர்ந்த செல்லையர், முற்றத்துப் பலாமரத்தின் கீழ் உக்கிக்கிடந்த தம் நாற்காலியின் முன்னால் பலாச்சருகுப் படலத்தின் மத்தியில் தெரிந்த எலும்புக் கூட்டைக் கண்டதும் - கதறிக் கதறிக் கைகளால் தொட்டுத் தொட்டுத் தம் கண்களில் ஒற்றினார் தம் மனம் ஆறும் வரை!.

# A-9 னை நீளும் நினைவுகள்




இடைக்கிடை துயர் மண்டிக் கிடந்திட்ட
இடங்கள் யாவிலும் 'தார் எடு' பட்டிடப்
படுக்கைப் புண்ணோடு கிடந்த நெடுஞ்சாலை
பத்தியந் தின்று சிரிக்கத் தொடங்கிற்று.
தடதடத்தோடும் வண்டில்கள், மண்ணெண்ணை
தனைக் குடித்தோடும் வாகனம், சைக்கிள்கள்,
அடிக்கடி நடமாடித் திரிந்தன.
அருகெலாம் வனம் அழகாய் மலர்ந்தது.

பாலைப் பழங்களோ.... பாலோடுதிர்ந்தன.
பாதையோர இலந்தையின் முட்களை
நூறு நூறு பழங்கள் மறைத்தன.
நூதனங்களாய் ஈச்சை கனிந்தது.
வீரம் உரமாய்க் கிடந்த நிலத்திலே
வெட்ட வெட்ட மரங்கள் தளைத்தன.
சூரியன் கூடக் காணாத் தரையென
துளிர்த்திருந்தது வன்னிப் பெருவனம்.

கண்டி வீதிக்குத் தாமும் உருத்தென
காட்டு விலங்குகள் அன்பைப் பொழிந்தன.
வண்ண மான்கள், மரைகள், குரங்குகள்
வந்து போயின.... வாழ்வைப் பெருக்கின.
பண்ணெடுக்கும் குயில்கள், மயில்களும்,
பட்சி ஜாலமும் பண்ணும் இசைவிழா
என்றுங்கேட்டு A – 9 உம் மகிழ்ந்திடும்.
கடக்கும் யானைகள் ஆசிர்வதித்திடும்.

-ஜெயங்கொண்டான்

# பண்பாடு



நல்லாயிருக்குதிங்கே பண்பாடு - நாங்கள்
எல்லோரும் நாகரீக மோகத்திலே பெரும்பாடு
பொல்லோடு உலாவிவந்த பொன்னம்மா
செல்லோடு வீதியிலே பேசுகிறா.
வேட்டியிலே உலவிட்ட அவள் கந்தையனும்
பாட்டியுடன் ஜம்பரிலே புதுடொல்பின் வாகனத்தே

கந்தையனின் பேரன் தனஞ்சயனும்
கடிவாளம் இல்லாத "கன்றட் டபிளெஸ்ஸில்"
கண்மூடி முழிக்கமுன்னம் ஓடுகிறான்.
வீதியிலே செல்லும் மகள் பரிமளமோ
பாதியிலே உடையணிந்து செல்லுகிறாள்.

லண்டனிலே பிறந்துவிட்ட பேரமகன் - இங்கு
கண்டதையே எடுக்குதையோ கமராவில்
மம்மி நாட்டுப் பண்பாடு இதுவென்று
டம்மி யாகப் போகுதையோ தமிழ்ப் பண்பாடு
நல்லாயிருக்குதிங்கே நம்பாடு.

வட்டூர் வரதர்

# மாலையும் சோலையும்

## கலாநிதி. சொக்கனின் வாழ்க்கைப் பதிவுகள்

*சென்றவாரத் தொடர்ச்சி...*

விவசாயம், தச்சுவேலை, சங்கீதம், சித்திரம் ஆகியன செய்முறைப் பாடங்களாய் விளங்கின. இவற்றோடு தேகப்பயிற்சி, மெய்வல்லுநர்க்கான பயிற்சிகள், காற்பந்து, கரப்பந்து விளையாட்டுக்கள் என்பனவும் இடம்பெற்றன.

இவையெல்லாம் கற்றும், பயின்றும், கற்பித்தலில் திறமை பெறாவிட்டால் பயன் என்ன? பயிற்சிக் காலத்திலே தவணைக்கு இருவாரங்கள் சூழலிலுள்ள பாடசாலைகளிலே விரிவுரையாளர்களின் மேற்பார்வையில் கற்பித்தலும் நடைபெறும். இறுதிப்பரீட்சையில் கற்பித்தலும், விரிவுரையாளரை - பரீட்சகர்களாகக்கொண்டு மதிப்பிடப்பெற்றுப் புள்ளி வழங்கப்படும்.

இவ்வளவும் கிரமமாகவும், நிறைவாகவும் நடைபெறவேண்டுமானால், விடுதியிலே தங்கியிருந்து செயற்படுவதைத் தவிர்த்தல் இயலாது என்பது எவராலும் ஏற்றுக்கொள்ளவேண்டிய ஒன்றேயாகும். எங்களுடைய பயிற்சிக் காலத்தில் செயற்பட்ட நேரசூசி பின்வருமாறு அமைந்திருந்தது -

காலை 5.00 - 6.00 - மண்டபங்களில் சுயமாகவிருந்து படித்தல்.

காலை 6.00 - 7.00 - அவசிய கருமங்கள், பகலுணவு.

காலை 7.00 - 12.00 - விரிவுரைகள்.

மதிய இடைவேளை - மதிய உணவு.

பிற்பகல் 1.00 - 3.00 - செயமுறைப் பாடங்கள் (சங்கீதம், சித்திரம் உட்பட)

3.00 - 4.00 தேநீர் இடைவேளை.

4.00 - 6.00 உடற்பயிற்சிகள், விளையாட்டுக்கள்.

மாலை 6.00 - 7.00 - ஓய்வு.

7.00 - 8.30 - மண்டபங்களில் சுயபடிப்பு.

8.30 - 9.00 - இரவு உணவு.

சனிக்கிழமைகளிலே சிறப்பாக விவசாயப் பாடம் இடம் பெறும். பயிலுநர்கள் தங்களுக்கென ஒதுக்கப்பட்ட துண்டு நிலங்களிலே பயிர் விளைத்தல், மைதான விளையாட்டுக்கள் என்பவற்றில் எஞ்சிய நேரங்களைக் கழிப்பர். ஞாயிற்றுக்கிழமைகள் ஓய்வு நாட்களாயினும் வீட்டுக்குச் செல்லமுடியாது. இரு கிழமைகளுக்கு ஒரு தடவை மட்டுமே வீடு செல்லலாம். மேலோட்டமாக இந்தப் பணித்திட்டத்தைப் பார்க்கும்போது இது ஓர் இலட்சியமேயன்றிச் செயற்படுததுவது இயலாத காரியம்போலவே தோற்றலாம். ஆனால், அக்காலத்தில் இத்தகையதொரு திட்டத்திற்கு ஆசிரியப் பயிலுநர்கள் தம்மை இசைவாக்கம் செய்துகொள்ள வேண்டியேயிருந்தது.

சில பின்னடைவுகள் ஏற்பட்டாலும் - கட்டுப்பாடுகளும், ஒழுங்குகளும், பாடத்திட்டமும் பெருமளவு நடைமுறைப்படுத்தப்பட்டன என்றே கொள்ளலாம்.

ஆசிரியர் சீருடை விடயத்திலே மிகவும் கண்டிப்பு நிலவியது. வேட்டி, தோள்பூட்டுடன் கூடிய தேசியச் சட்டை (நஷனல்) என்பவற்றோடு கற்பித்தற் பயிற்சிப் பரீட்



சைகளின்போது, உத்தரீயமாக மடித்த சால்வை அணிதலும் கட்டாயமாயிருந்தது. தோள்பூட்டுச் சட்டை அணிவது பின்னாள்களில் கட்டாயமில்லாது போயினும், நெஞ்சுப்பூட்டுச் சட்டையிலே தெறிகள் எப்பொழுதும் பூட்டப்பட்டு, நெஞ்சு மறைக்கப்பட்டிருத்தல் அவசியம் என்றும், தெறிபூட்டாது திறந்த நிலையில் காட்சிதருவது அக்காலத்தில் ஒருவகைக் காடைத்தனம் என்றும் கருதப்பட்டதாகத் தெரிகின்றது.

கோப்பாய், பலாலி ஆசிரிய கலாசாலைகளின் புகழ்பூத்த அதிபர் என்.சண்முகரத்தினம் - கொழும்பு றோயல் கல்லூரியின் ஆசிரியராயிருந்து, கோப்பாய் ஆசிரிய கலாசாலை வந்தவர் அவர். தமிழ்க் கலை, கலாசாரம், ஆன்மீகம் என்பவற்றில் நிறைந்த அறிவும், சிறந்த பிடிப்பும் இருந்தபோதிலும் - ஒழுங்கு, கட்டுப்பாட்டில் மிகுந்த கடுமையானவர். இவ்வொழுங்கு பற்றிய சுவாரசியமான சம்பவம் ஒன்றைக் கூறவேண்டும்.

தொய்வு நோயினால் பீடிக்கப் பட்டிருந்த அதிபர் சண்முகரத்தினம் - பலாலி ஆசிரியர் கலாசாலையிலே அதிபர்க்குரிய மனையிலேதான் காலமானார். அதிகாலைப் பொழுதில் நிகழ்ந்த இந்தத் துயரநிகழ்வைக் கலாசாலைப் பணியாளர் விடுதிக்குச்சென்று, சிரேஷ்ட மாணவர் தலைவருக்கு அறிவித்தார்.

பதகளிப்புடன் எழுந்து மேற்சட்டையை அவசரம் அவசரமாக அணிந்தபடி விடுதியிலிருந்து வெளிப்பட்ட மாணவர் தலைவர், தமது மேற்சட்டையை, அதிபர் மனைக்குப் போகும்வழியில் பார்த்துவிட்டு, திகில் கொண்டவராய்த் திரும்பிச் சென்று தெறிகளை எடுத்துச் சட்டையில் இட்டுக் குத்தி, நெஞ்சை மறைத்துக் கொண்டபின் திரும்பி அதிபர் மனைக்கு ஓட்டமாய் ஓடிச் சென்றாராம்.

மரணமடைந்த பின்னரும் அதிபர் தம்மை விழித்துப்பார்த்து "சட்டைத் தெறியை ஏன் குத்தவில்லை?" என்று கேட்பார் என்று அவர் பயந்திருப்பார் என்று கொள்வது அசட்டுத்தனம். அமரத்துவம் அடைந்த அதிபரின் ஆத்மாவுக்கு எவ்வகையிலும் ஊறு செய்யக் கூடாது என்ற நல்லெண்ணமே மாணவர் தலைவரை அவ்வாறு செய்யத்தூண்டியிருக்கலாம்.

1950 ஆம் ஆண்டு இறுதி வரை எங்கள் அதிபராய் விளங்கியவர் திரு.க.முத்துவேற்பிள்ளை **B.Sc, P.G.T.** (பின்னாளில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அதிபர்) முன்னாள் அதிபர் சண்முகரத்தினத்திடம் றோயல் கல்லூரியிலே கற்கும் வாய்ப்புப் பெற்ற இவர், தம் ஆசிரியர் போன்று கடும் ஒழுக்காற்றினை மேற்கொண்டவர் அல்லர். ஆனால், பெரிய குற்றங்கள் என அறியவரின் - அக்குற்றம் செய்தவரை ஆங்கிலமும், தமிழும் கலந்த கடின வார்த்தைகளில் ஏசுவார். அவ்வாறு ஏசுகையில் உணர்ச்சி மயமாகி அவரே கண்ணீர் விடுவதும் உண்டு. இத்தகைய காட்சியைக்காணும் எவரும் அதன் பின் பெரும் பிழைகளைவிடக் கூசியதை, தவிர்த்ததை நான் கண்டிருக்கிறேன்.

கலாசாலையிலே அதிபர் விடுதி இருந்தபோதிலும், அதில் அவர் தங்குவது குறைவு. கலாசாலைச் சொத்துக்களிலோ, மாணவர்க்குரிமையானவற்றிலோ கைவைத்துத் தமக்குரித்தாக்குவதைக் கனவிலும் நினையாத தருமவானாய் அவர் விளங்கினார்.

தோட்டத்திலே உற்பத்தியாகும் காய்கறிகள், பழங்கள் யாவும் மாணவரின் உணவுக்கே அளிக்கப்பட்டன. அவர் அதிபராயிருந்த ஓராண்டுக் காலமும் எங்களுக்கு நல்லுணவு, -சத்துள்ள உணவு, தேவைக்கும் அதிகமான உணவு கிடைத்ததென்றால் அது மிகையன்று.

*தொடரும்....*

# இலக்கியச் சோலை

## அம்மா அழாதே!

குறுநாவல்

ரவி அருணாசலம்




அய்யகோ என நான் அஞ்சுகிறேன். சுவைபடச் சொல்ல என்னிடம் ஆயிரம் கதைகள் உள்ளன. ஆயுள் பரியந்தமும் அவற்றை நான் சொல்வேன். ஆனால், ஆயுள் போதாதோ என நான் அஞ்சுகிறேன். ஆயினும், அவற்றினிடை நான் கதைசொல்லப் புகுவேன். சொல்லில் சுவை சேர்ப்பேன். சேர்த்து அவற்றை உங்களிடை சேர்ப்பிப்பேன். எனினும், என்னிடம் தீராக்கவலை வேறு உண்டு. உப்பு, மிளகு, சீனி, அசிரி, மா என்று அன்றாடத் தேவைகளும், சிறு சிக்கல்களும், தாய், தந்தை சகோதரம், மனைவி, மக்கள், தோழர், உற்றார், உறவினர் என்று பெருங்கடமைகளும் - என கதையாடலைக் கலைக்கின்றன. இவைகளினிடை என் கதை உச்சத்தைத் தொடுமென்றில்லை, உன்னதம் பெறுமென்றில்லை. ஆயினும், தரப்பட்டுள்ள அவகாசத்தினுள் அடியேன் கதையாடுவேன்.

நான் மீண்டும் செல்கிறேன். என் வாழ்விற்கு, அதனூடு பயணம் செய்து முந்தைய வாழ்வை எட்டிப்பார்க்கிறேன். என்னுள் சேமிக்கிறேன், சேகரிக்கிறேன், சேகரித்தவற்றுள் சிற்சிலவற்றைப் பொறுக்கித்தருகிறேன்.

அன்று கவுணாவத்தை வைரவர் கோயில் வேள்வி. வேள்வி என்றால் குடாநாட்டுக்கே விழா! கொழும்பில் உத்தியோகம் பார்ப்போரும் ஓடி வருவர். வருவதற்கு வசதியாகச் சனிக்கிழமைதான் வேள்வி. வெள்ளி இரவு மெயில் எடுத்தால், சனி விடிய வடு. வந்தவருக்கு இடியப்பத்துடன் - பால் சொதியும், முட்டை அவியலும் எனச் சிறுவிருந்து இருக்கும். சற்றுக்கதையாடி, பிறகு பதினொரு மணிக்குக் கிளம்பினால் நேரே பனையடி. கள்ளடி! ஆனி மாதத்துக்குக் கள்ளும் நல்லா ஊறும். முட்டியிலும் அள்ள அள்ளக் குறையாது நிரம்பும். ஆனால், வார்க்க வார்க்க வயிறு நிரம்பாது. இன்னும் இன்னும் எனச் செமிச்சுக் கொடுக்கும். ஆனி வெயில் அதை உறிஞ்சும். ஆனி வெயிலுக்குச் சோளகம் ஒரு சுகமெனில், கள்ளு ஒரு இதம். குடித்து முடியப் பிறகு ஒரு முழுக்கு. வளவுள் நீர்பாயும். பாயவிட்டு, தலை துடைத்து, குசினிக்குள் போய்க் குந்தினால், இறைச்சிக் குழம்போடை, இறைச்சிப் பிரட்டலோடை, இறைச்சிப் பொரியலோடை, எலும்பு இரசத்தோடை - மூண்டு கோப்பை சோறு. மூக்குமுட்டச் சாப்பாடு. திண்ணையில் சிறுபடுக்கை. பிறகு சோளகம் தழுவுகிற பின்னேரத்துக்கு ஒழும்பி, சோம்பல் முறித்து, முகம் கழுவி, தேத் தண்ணியை வேண்டாம் என்று தவிர்த்து, பனையடியில் தவம், ஆறுமணியளவில் கள்ளிறங்கும். பனையோலைத் துண்டெடுத்து, பறகளின் இடையில் சிக்கிய இறைச்சித் துகள்களை விடுவித்து கள்ளுக் குடிப்பது மகா ஆனந்தம். கள்ளின் மணத்தோடு மத்தியானம் தின்ற இறைச்சியின் ஏவறை வரும். வலது கையை மணந்து பார்த்தால், இறைச்சி மணக்கும். எல்லாம் ஆனந்தம். இரவும் அதே இறைச்சி. உறைக்க, உறைக்க 'ஊ...ஊ...' என்று தின்னல். மத்தியானம் வழிந்ததுபோல் பிடரியால் வழியாது.

ஞாயிறு காலையில் பழைய இறைச்சிக்கறியுடன் சுடு புட்டைப் பிரட்டி ஓர் அருமையான அமிர்தம். அது முடிய ஊர்ப்புதினம் கதைத்து, பதினொரு மணிக்குப் போய்க் கள்ளடி. வேள்வி இறைச்சி உப்புப்போட்டு அவித்து வைத்திருக்கும், அதில் இன்னொரு அருமையான சமையல். சாப்பிட்டுப் படுத்துப் பின்னேரம் ஏழு மணிக்குக் கூவிவரும் மெயிலில் புறப்பட வேண்டும். இரவுக்கென்று, நெருப்பில் வாட்டிய வாழை இலையில், சுடுசோறு வைத்து, இறைச்சிப் பிரட்டலை அள்ளிப் போட்டுக் கட்டியிருக்கும். மெயில் அசைந்து அசைந்து பளைக்கு வரச் சோத்துப் பார்சல் அவிழ்படும். சுடுசோறு வாழை இலையை அவித்த மணமும், இறைச்சிப் பிரட்டலின் மணமும் ஸ்ரேசன் மாஸ்ரரின் மூக்கைத் துளைக்கும். தன்ரை பாட்டிலேயே வாயுறப் பண்ணும். அருமையான விருந்தை அந்த இரவிற்கு, பளை ஸ்ரேசனில் மெயிலின் இருக்கையில் அமர்ந்து ஆறுதலாக உண்டு, தண்ணீர் குடித்து, இறங்கிப் போய், பைப்பில் கை கழுவி, போத்தலில் தண்ணீர் பிடித்து, வந்து 'அப்பாடா' என்று இருந்தபின்தான் ஸ்ரேசன் மாஸ்ரர் விசில் ஊதுவார். உண்ட களைப்பு மெயிலுக்கும் வந்ததா என அரக்கி அரக்கிக் கிறீச்சிட்ட சத்தம் போட்டுப் புறப்படும். பளை ஸ்ரேசனின் மங்கலான ரியூப் லைற்றுகளும் பிறகு மேர்க்கூரி லைற்றும் மறையும். மெயில் வேகம் பிடித்ததென்றால் வன்னிக் காட்டுக்குள் வரும் யானைகளுக்கும் அஞ்சாது பறக்கும்...

இப்போது நான் சொன்னது நானோயா மாமாவின் கதையை. அனுபவிக்கத் தெரிந்தவர். ஆனால், ஆசை மாமா பாவம். கிளிநொச்சி கல்மடுவில் வயல் வேளாண்மை செய்தார். கவுணாவத்தை வேள்விக்கு ஒரு கிழமை முன்னரே வந்துவிடுவார்.

வருகிறபோதே பனை கொடி ஏறித் திருவிழா நடக்கும். கல்மடுவில் தென்னங்கள்ளுத்தானே? ருசியுமில்லை, அடி மண்டியைக் குடிக்கிறதுபோலவும் புளிக்கும். தென்னங்கள்ளுக் குடித்தால் வாதம் வரும் என்றும் சொன்னார்கள். மேலாக தென்னங்கள் குடித்தால் சோளகமும் சுவைப்பதில்லை, நிலவும் குளிர்வதில்லை. பனங்கள்ளுக்குத்தான் ஏங்குது வாயும், வயிறும். கவுணாவத்தை வேள்வி ஒரு சாட்டு... வந்துவிடுவார் ஆசை மாமா.

வேள்விக்கு முதல்நாள் வெளியன்று பெருவிழா நடக்கும். கருகம்பானை கர்ணனினதுதான் முதல் கிடாய். கர்ணன் வீட்டில் ஒருமேடை கட்டி, மேடையில் மாலைபோட்டு, குங்குமப்பொட்டு வைத்து, மாடுபோலக் கிடாய் நிற்கும். இரவுக்கு லைற் வெளிச்சத்தில் நித்திரையும் கொள்ள முடியாது, முழுசிக்கொண்டு நிற்கும். பக்கத்தில் இன்னொரு மேடையில் மேளச்சமா நடக்கும், சின்னமேளம் நடக்கும், கோஷ்டி நடக்கும், விடிந்துபோகும். ஆசைமாமா அடிமண்டியாய் தயிர்க்கட்டிபோல் வந்துவிட்ட புளிச்ச கள்ளெல்லாம் குடித்துவிட்டு மேளச்சமாவை, சின்னமேளத்தை வாய் புழுந்தி புழுந்திப் பார்ப்பார். கோஷ்டி பிடிக்காது தியாகராஜா பாகவதரின் பாட்டு ஏதும் பாடுறாங்களே! கோஷ்டி நடக்கிறபோதே, கவுணாவத்தை வைரவர் கோயில் பக்கம் போய்விடுவார். விடிகிறதுக்கு முன்னமேயே சாமம் சாமமாய் கிடாய்கள் வண்டில்களிலும், ட்ராக்ரர்களிலும் வந்திறங்கும். ஆயிரத்துக்கும் மேற்பட அவையிருக்கும். கிடாய் என்று அவற்றைச் சொல்லிவிட முடியாது. அத்தனையும் மாடாக இருக்கும். ஆக மிஞ்சினால் மரையாக இருக்கும்.

குட்டிக்கிடாயை மாடாக்குவதற்கும், மரையாக்குவதற்கும் பட்டபாட்டினைச் செல்லத்துரையண்ணையிடம்தான் கேட்க வேண்டும். கவுணாவத்தை வேள்விக்கு மூன்று மாதம்தான் இன்னும் இருக்கென்றால், செல்லத்துரையண்ணரின் வழமைகள் மாறுபடும். கடலை ஊறவைத்துத் துவைப்பார். தவிடு, புண்ணாக்குக் குழைப்பார். பிலாவிலை அல்லது ஆலமிலை எடுத்துக் கடலைத்துவலையும், தவிடு, புண்ணாக்குக் குழையலையும் வைத்து, நாலாக மடித்து, இராசகோபாலண்ணை தவில் அடிக்கேக்கை கிடைத்த இடைவெளியில் வெத்திலையில் சுண்ணாம்பு கீறி, பாக்கு வைத்து நாலாக மடித்து, வாய்க்குள் போட்டு அதக்குவதுபோல, செல்லத்துரையண்ணையும் கிடாயின் தாடையை நெருக்கிப் பிடித்து, வாயைத் திறக்கப்பண்ணி உள்ளே அதக்குவார்.

அப்படியும் போகப் பஞ்சிப்பட்டால், பொல்லெடுத்து அதன் தொண்டைவரை தள்ளுவார். முண்டி விழுங்கப் பண்ணுவார். ஒருநாளைக்கு இரண்டு தரம் அப்படி நாற்பது ஐம்பது சரை போகும். கிடாய் மாடாகவோ, மரையாகவோ மாறிவிடும்.

*தொடரும்.....*

## நூல் அகம்

ஈழத்தில் சஞ்சிகை வெளிவிடுவது ஒரு கடினமான முயற்சியாகும். காலத்துக்குக் காலம் பல தரமான சஞ்சிகைகள் வெளிவந்து, பொருளாதார நெருக்கடியினால் அவ்வப்போது மடிந்துவிடும் துர்ப்பாக்கியநிலை நம்நாட்டில் அடிக்கடி நிகழ்வதுண்டு.




### ஏகலைவன்

ஆனால், பாடசாலை மட்டத்திலிருந்து 'ஏகலைவன்' என்ற சஞ்சிகையை உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரியினால் வெளியிடப்பட்டு வருகின்றது. கல்லூரி மட்டத்தில் கலை, இலக்கியத்துறையில் இப்படியான ஒரு சஞ்சிகை வெளிவருவது ஆரோக்கியமானது. பாடசாலை மாணவர்களுக்கு நூற்றுக்குத் தொண்ணூறு வீதமானோருக்குக் கலை, இலக்கிய விடயத்தில் சுத்த சூனியம்தான். இதுபோன்று வெளியீடுகள் மேலும் பல பாடசாலைகளில் வெளிவந்து இலக்கிய அறிவை ஊட்டவேண்டும்.

கிழக்குப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த கலாநிதி யோகராசாவால் "பாரதியின் வசன கவிதைகளும் காற்றும்" என்ற கட்டுரையில் - பாரதியின் கவிதைப் போக்குகளைப் பல்வேறு கோணங்களில் படம் பிடித்துக் காட்டுகிறார். பாரதி அறிமுகப்படுத்திய வசன கவிதை வடிவம் தமிழிற்குப் புதியது என்பதைப் பல சான்றுகள் மூலம் எடுத்துக்காட்டுகிறார்.

ஹைக்கூ கவிதை பற்றி ந.சிவகுமாரன் கவிதையின் இலக்கணங்கள், அது எப்படி உருவாக்கப்பட வேண்டும் என்று பல தரவுகளைத் தந்துள்ளார்.

மற்றும் பாடசாலை மாணவர்கள் பலரால் எழுதப்பட்ட தரமான ஆக்கங்கள் இந்தச் சஞ்சிகையில் வெளி வந்துள்ளன. சஞ்சிகையின் அமைப்பு பாராட்டத்தக்கவாறு அமைந்துள்ளது.

மகரம்

## சந்திப்பும் நினைவுகளும்

வ.அ.இராசரத்தினம் முதுபெரும் எழுத்தாளர்களில் ஒருவர். மூதூரைப் பிறப்பிடமாகக் கொண்டவர். 1940 களில் எழுதத்தொடங்கிய அவர், பல நூற்றுக்கணக்கான கதைகளை எழுதியவர். இறக்கும்வரை எழுதிக் கொண்டிருந்த எழுத்தாளர் அவர்.

இவரை முதன்முதலில் கொழும்பில் ஆட்டுப்பட்டித் தெருவிலுள்ள எழுத்தாளர் எம்.ஏ.நு·.மானின் 'ரெயின்போ' அச்சகத்தில் சந்திக்க நேர்ந்தது. எஸ்.பொ. அவர்களும் அங்கு தங்கியிருந்தவர். எம்.ஏ.நு·.மான், எஸ்.பொ., வ.அ. - கூடவே நானும் மாலை நேரங்களில் பல தடவைகள் சந்தித்து அளவளாவி இருக்கிறோம்.

இதன் காரணமாக அவரது இரு புத்தகங்கள் யாழ்ப்பாணத்திலிருந்த எனது அச்சுக்கூடத்தில் பிரசுரிக்க நேர்ந்தது. பிறப்பில் கிறிஸ்தவராக இருந்த அவர், மூதூரிலுள்ள சைவக்கோயில் மீது பாடப்பட்டு வந்த 'திருக்கரசைப் புராணம்' என்ற நூலைப் பதிப்பித்து வெளியிட்டவர் அவர்.

விசர்நாய்க்கடியினால் இறந்த அவரின் மனைவியின் சோகத்தைத் தாங்காது, 'ஒரு காவியம் நிறைவு பெறுகிறது' என்ற குறுநாவலையும் எழுதி, எனது அச்சகத்தில் பிரசுரித்தவர்.

இந்த கரு - நாவலின் வெளியீடு சம்பந்தமாக யாழ்ப்பாணத்துக்கும் வந்துபோனவர்.

இவர் எழுதிய முத்திரைக் கதையான 'தோணி' - தோணி என்ற சிறுகதைத் தொகுதியில் இடம்பெற்றுள்ளது. சாகித்திய மண்டலப் பரிசு பெற்று, பல வேற்று மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டது.

மூதூர்ப் பிரதேச மக்களின் வாழ்க்கை நிலையையும், கிழக்கிலங்கை மண்ணிலுள்ள பாத்திரங்களை முன்வைத்து 'கொழுகொம்பு' என்ற நாவலை எழுதியவர். "ஒரு வெள்ளை மணல் கிராமம் காத்துக் கொண்டிருக்கிறது", "கிரௌஞ்சப் பறவைகள்" என்பன இவர் எழுதிய ஏனைய நாவல்களாகும்.

வடக்கு -, கிழக்கு ஆளுநர் விருது பெற்ற இப்படைப்பாளியின் மறைவு சோகத்துக்குரியது.

- மணிசேகரன்

## நூல் அகம்




### திசை புதிது

புதிய சிந்தனைகள் - புதிய முகங்களை - புதிய கருத்துக்களைத் தேடிப் புறப்பட்டிருக்கிறோம் என்று ஆசிரிய குறிப்பினைக் கொண்டு கொழும்பில் இருந்து 'திசை புதிது' என்ற இலக்கியச் சஞ்சிகை வெளிவந்துள்ளது.

இச்சஞ்சிகை - ஈழத்திலக்கியத்தின் முன்னோடிகளான வரதர், சோ.ப., சாந்தன் ஆகியோரின் ஆக்கங்களோடு, இன்னும் பல ஆக்கங்கங்களைத் தாங்கி வெளிவந்துள்ளது.

சாந்தன் - இலக்கிய உலகிற்கு எவ்வாறு காலடி எடுத்துவைத்தார் என்பதைத் தனது கட்டுரை மூலம் தெரியப்படுத்தியுள்ளார். அத்தோடு, 'திசை புதிது' சஞ்சிகை வெளியீட்டாளர்கள், இன்னமும் மாணவப் பருவத்திலேயே இருப்பவர்கள். இருந்தும் தமது ஆர்வத்தாலும், முயற்சியாலும் இச்சஞ்சிகை வெளியிடுபவர்கள் என்ற கருத்துக்களோடு, தான் தொடர்புபட்ட 'எழில்' சஞ்சிகையின் தோற்றமும், வளர்ச்சியும், அச்சஞ்சிகையும், அச்சஞ்சிகையின் மறைவையும் குறிப்பிடுகிறார்.

கவிஞர் சோ.ப. தனது நேர்காணலில் - தனது எழுத்துலக வழிகாட்டிகளான வித்துவான் கார்த்திகேயன், பண்டிதர் செல்லத்துரை, வை.ஏரம்ப மூர்த்தி, க.சிவராமலிங்கம், கொம்யூனிஸ்ற் கார்த்திகேசன் ஆகியோரை யாழ். இந்துக் கல்லூரியின் அன்று அமர்ந்திருந்த ஆசிரியர் பீடத்தினர் எனப் பெருமையுடன் கூறுகின்றார்.

வரதரின் எழுத்துலக வாழ்க்கை பற்றிய குறிப்பும், வரதர் எழுதிய 'ஊழையும் உப்பக்கம் காண்போம்' என்ற கட்டுரையும் வெளிவந்துள்ளது. இந்தக் கட்டுரையில், நிறைய வாசிப்பவர்கள் எழுத்தாளராக வர முடியாது என்பதைச் சுட்டிக்காட்டுகின்றார்.

சாரங்காவின் 'உயிர்த்திருத்தல்' என்ற சிறுகதையும், த.ஜெயசீலன், மு.மயூரன், ஆகர்ஷியா போன்றோரின் கவிதைகளும் இடம்பெற்றுள்ளன.

மொத்தத்தில் 'திசை புதிது' சஞ்சிகை தரமான இதழாக வெளிவந்துள்ளது. இவ்வாறு தொடர்ந்து வெளிவர வேண்டும் என்பதே எமது கருத்தாகும்.

'சோ'

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

### சிந்தனைக்கு

பகல்வெல்லும் கூகையைக் காக்க இகல்வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது.

-திருக்குறள்-

# நமது நோக்கு

## ஒரு ஜூன் அரசியல்!

வட-கிழக்கை அபிவிருத்தி செய்வது தொடர்பாக - எதிர்வரும் ஜூன் மாதத்திற்கு முன்பதாக ஒரு நிலையான உடன்பாட்டிற்கு வரவேண்டிய தேவை - சர்வதேச அழுத்தங்களினால் இலங்கை அரசாங்கத்துக்கு ஏற்பட்டிருப்பதாக- பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறியிருக்கிறார்.

இங்கு அவர் சர்வதேச அழுத்தம் எனக் குறிப்பிடுவதானது - ஜூன் மாதத்தில் ஜப்பானில் நடைபெறவுள்ள உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தையே என்பது வெளிப்படையானது.

உதவி வழங்குவதற்கு முன்வரும் நாடுகள் - பேச்சுக்களில் ஈடுபடும் இரண்டு தரப்பினரும் சில உறுதியான இணக்கப்பாடுகளுக்கு வரவேண்டுமென எதிர்பார்ப்பதனாலேயே - துரித நடவடிக்கை ஒன்றை மேற்கொள்ளவேண்டிய கட்டாயம் அரசாங்கத்துக்கு ஏற்பட்டிருக்கிறது என்பதை மறுப்பதற்கில்லை.

இந்த வகையில் - தனியே அமைதி முயற்சிகள் மட்டுமன்றி - தனது அரசாங்கத்தின் ஸ்திரத் தன்மைக்கும் சர்வதேச உதவி இன்றியமையாதது என்ற நிலையிலிருக்கும் அரசாங்கம் - உலக நாடுகள் எதிர்பார்த்து நிற்கும் சில உறுதிப்பாடுகளை- இன்னும் இரண்டு மாதங்களுக்குள் விடுதலைப் புலிகளுடன் செய்தாகவே வேண்டியிருக்கின்றது.

இதில் வேடிக்கை என்னவென்றால்- புரிந்துணர்வு ஒப்பந்தம் அமுலாக்கப்பட்டு ஒரு வருடமாகியும்- யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களது பொருளாதாரத்தை சுபீட்சப்படுத்தவோ, சுமுக வாழ்வுக்கு அவர்களை இட்டுச்செல்லவோ ஆமை வேகத்தில் நகர்ந்த அரசாங்கம், சர்வதேச நிதியுதவியில் தான் ஸ்திரத்தன்மை தங்கியிருக்கிறது என்றவுடன் - விழுந்து கட்டிக்கொண்டு செயலாற்ற முனைவதுதான்.

அதேவேளை - ஜூன் மாதம் ரணில் அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் இன்னொரு வகையிலும் முக்கியத்துவமுடையதாகின்றது.

தென்னிலங்கையில் தனக்குச் சாதகமான அரசியற் களத்துக்காகக் காத்திருந்து, காய்களை நகர்த்திவரும் - ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க- ஜூன் மாதத்திற்கு முன்னதாக பொதுத்தேர்தலை நடத்துவதற்கு உத்தேசித்து வருவதாக செய்திகள் வெளியாகிக்கொண்டிருக்கின்றன.

ரணில் அரசாங்கம் - ஜூன் மாதத்தில் சர்வதேச நிதியுதவியைப் பெற்றுவிட்டால் - சர்வதேச ஆதரவுடனும், பெற்றுவரும் நிதியுதவியுடனும் - தென்னிலங்கையில் மக்களாதரவை அதிகரித்துவிடும் என்று கணிப்பிட்டு - அதற்கு முன்னதாகவே - பொதுத் தேர்தலை நடாத்துவதற்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முயற்சித்து வருகின்றார். ஜனாதிபதியின் ஆலோசகரும், அவரது சகோதரருமான அநுரா பண்டாரநாயக்க வழியாகவே - இந்த விடயம் வெளிச்சத்துக்கு வந்திருக்கிறது.

எனவே - ஜூன் மாதம்வரை ரணில் தரப்பும் சரி, பொதுஜன ஐக்கிய முன்னணியும் சரி - தமது தளங்களைக் காத்துக்கொள்ளவும், எதிர்கால அரசியல் இலக்குகளுக்காகவும் - மிகுந்த தட்டமிடலுடன் களமிறங்குகின்றன என்றே கொள்ள முடியும்.

ரணிலைப் பொறுத்தவரை அவர் எதிர்பார்த்தபடி ஜூன் மாதத்திற்குள் பொதுத் தேர்தலை நடத்த அல்லது மாற்று அரசாங்கமொன்றை அமைப்பதில் பொதுஜன ஐக்கிய முன்னணி வெற்றிபெறத் தவறும் பட்சத்தில் - உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டின் வெற்றியென்பது அவருக்குத் தேவைப்படும் நாடாளுமன்றப் பெரும்பான்மையைப் பெறுவதற்கான தேர்தலுக்கு மிக ஊக்கந் தருவதாகிவிடும்.

எனவே - ஜூன் மாதமென்பது இலங்கை அரசியலைப் பொறுத்தவரையில் - குறிப்பிடத்தக்கதொரு அரசியல் முக்கியத்துவமுடைய மாதமாகவே ஆகிவிட்டது என்பதில் சந்தேகமில்லை.

# அரசியலமைப்பு ரீதியான எந்த மாற்றமும் சிங்கள தேசத்தை திருப்திப்படுத்த வேண்டும்!

## பிக்குகளின் பேரணியில் வலியுறுத்து

இலங்கையின் அரசியலமைப்பு ரீதியாகச் செய்யப்படும் எந்தவொரு மாற்றமும் - மகாசங்கத்தின் அனுமதியையும், சிங்கள தேசத்தைக் கட்டாயம் திருப்தி செய்யக் கூடியதாகவும் அமையவேண்டும் என்று கொழும்பில் பிக்குகள் நடத்திய பேரணியில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

'பௌத்த அரசினாலான ஒரேநாடு' என்ற ஆர்ப்பாட்டப் பேரணி நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்றது. இந்தப்பேரணி - விகாரமாதேவி பூங்காவின் முன்பாகவுள்ள புத்தர் சிலைக்கு அருகிலிருந்து ஆரம்பித்தது.

இந்தப் பேரணியில் ஜாதிக சங்க சம்மேளய, சிஹல உறுமய மற்றும் இலங்கை தேசியக்கட்சியின் பிரமுகர்கள் கலந்து கொண்டனர். வண. எல்லாவெல மெதனந்த தேரோ, வண. ஓமல்பே சோபிததேரோ, வண. அத்து ரலியேரத்தினதேரோ உள்ளிட்ட முக்கியமான பௌத்த பிக்குகளும் இந்தப் பேரணியில் கலந்துகொண்டனர்.

இந்தப் பேரணியின் முடிவில் நடத்தப்பட்ட கூட்டத்தில் தீர்மானங்கள் சிலவும் எடுக்கப்பட்டன.

"இலங்கை சிங்கள மக்களின் நாடு. இது பௌத்த சிங்கள



மக்களின் வரலாற்றுத் தாயகம். இங்கு சிங்களவர் மாத்திரமே தேசிய இனத்துக்கான உரிமைகளுடன் வாழக்கூடியவர்கள்.

மற்றைய சமூகத்தவர் எவருக்கும் சர்வதேசச் சட்டப்படி மட்டுமே உரிமைகள் வழங்கப்படும். சிங்கள தேசம் - இன, மொழி, மத அடிப்படையிலான எந்தவொரு பிளவுக்கும் ஆட்படாது.

சிங்கள தேசத்தின் தலைநகரம் அனுராதபுரம். இதன் தேசியதினம் பொசன் மாத பௌர்ணமி தினம். சிங்கள தேசத்தின் தந்தை துட்டகைமுனு மன்னன். இந்த தேசத்தின் தாய் விகாரமாதேவி அரசி" என்றும் இந்தக் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டது.

## கிழக்கில் இளைஞர் படையணிக்கு இன்று முதல் ஆட்சேர்ப்பு!

கிழக்கு மாகாணத்தில் இளைஞர் படையணிக்கான ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் இன்று ஆரம்பமாகவுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

கிழக்கு மாகாணத்திலுள்ள மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை ஆகிய மாவட்டங்களிலேயே இன்றுமுதல் இளைஞர் படையணிக்கு ஆட்சேர்ப்பு நடத்தப்படவுள்ளது. மாவட்ட இளைஞர் சேவை மத்திய நிலையங்களில் இதற்கான நேர்முகத்தேர்வுகள் இன்று முதல் 28 ஆம் திகதிவரை நடத்தப்படும்.

முதற்கட்டமாகத் தொகுதிவாரியாக 15 பேர் தெரிவு செய்யப்படவுள்ளனர். அடுத்தகட்டத்தில் தொகுதிகள் தோறும் 250 பேர் இப்படையணிக்குச் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## மத்திய கிழக்கிலுள்ள இலங்கையர்களின் பாதுகாப்பு; உடனுக்குடன் திரட்டப்படும் தகவல்

மத்திய கிழக்கு நாடுகளிலுள்ள இலங்கையரின் பாதுகாப்புக்குக் குறித்து அரசாங்கம் அரைமணி நேரத்துக்கு ஒருமுறை தகவல்களைத் திரட்டும் நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது.

இதற்காக மத்திய கிழக்கிலுள்ள இலங்கைத் தூதரங்களுடன் தொடர்புகள் வலுப்படுத்தப்பட்டு, அங்குள்ள இலஙகையரின் பாதுகாப்புக் குறித்த தகவல்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

இதுவரையில் மத்திய கிழக்கில் யுத்தத்தினால் எந்தவொரு இலங்கையரும் பாதிக்கப்படவில்லை என்றும் அரசாங்கம் அறிவித்துள்ளது. நெருக்கடியானநிலை ஏற்பட்டால் - இலங்கையருக்கான பாதுகாப்பு ஏற்பாடுகளை கவனிக்கவும், விசேட ஏற்பாடுகள் - தூதரகங்கள் மூலம் செய்யப்பட்டுள்ளன.

## முஸ்லிம் காங்கிரஸ் - ஐ.தே.க. முரண்பாடுகள் அதிகரிப்பு!

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ"க்கும் - ஐக்கிய தேசியக்கட்சிக்கும் இடையிலான முரண்பாடுகள் அதிகரித்து வருகின்றன. ஐக்கிய தேசியக்கட்சியின் அம்பாறை மாவட்ட அமைச்சர்களுக்கும் - முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமுக்கும் இடையில் பிளவுகள் அதிகரித்துள்ளன.

முஸ்லிம் காங்கிரஸின் நடவடிக்கைகள் குறித்து அம்பாறையில் அமைச்சர்கள் பி.தயாரட்னவும், ராஜித சேனாரட்னவும் கடுமையாக விமர்சித்திருந்தனர். இது குறித்து முஸ்லிம் காங்கிரஸ் சிரேஷ்ட தலைவர்கள்- பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அறிக்கையொன்றைக் கையளித்துள்ளனர்.

அம்பாறையில் முஸ்லிம் காங்கிஸ் தமது ஆதரவாளர்களை ஒடுக்கி வருவதாக ஐ.தே.க. பிரமுகர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

ஐ.தே.கட்சியினரின் குற்றச்சாட்டுக்கள் குறித்து அமைச்சர் ரவூப் ஹக்கீம் நாடு திரும்பியதும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்து கடும் நடவடிக்கை எடுக்கக் கோரவுள்ளதாக முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் பஷீர் சேகுதாவூத் தெரிவித்தார்.




வட-கிழக்கு மாகாண பண்பாட்டுத்திணைக்களம் திருகோணமலை இந்துக்கல்லூரியில் நேற்றும் நேற்று முன்தினமும் நடத்திய புகைப்படக் கண்காட்சியில் கலந்து கொண்டு உரையாற்றிய வட-கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் வே.பொ. பாலசிங்கம் உரையாற்றுவதை முதலாவது படத்திலும் கண்காட்சியைப் பார்வையிடும் மாணவர்களை இரண்டாவது படத்திலும் காணலாம்.

# ஜப்பான் பேச்சுக்கள் குறித்து அமெரிக்காவில் ஆராயப்படும்

## கூட்டுக்குழுக் கூட்டம் நாளை நடக்கும்

(கொழும்பு)

ஜப்பானில், இலங்கை அரசுக்கும் - விடுதலைப் புலிகளுக்குமிடையில் நடைபெற்ற 6 ஆவது சுற்றுச் சமாதானப் பேச்சுவார்த்தையின் முன்னேற்றம் குறித்து அமெரிக்காவில் நடைபெறவுள்ள வர்த்தக முதலீட்டுக் கூட்டுக்குழுவின் கூட்டத்தில் ஆராயப்படவுள்ளது.

வர்த்தக முதலீட்டு ஒப்பந்தத்தின் கீழ் அமைக்கப்பட்ட இந்த கூட்டுக்குழுவின் இரண்டாவது கூட்டம் - வொஷிங்ரனில் நாளை நடைபெறவுள்ளது.

வெள்ளை மாளிகைக்கு - பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சென்ற ஜூலை மாதம் விஜயம் ஒன்றை மேற்கொண்டபோதே இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

இலங்கைக்கும், அமெரிக்காவுக்குமிடையிலான இரு தரப்பு மற்றும் பல துறைசார் விடயங்களை ஆராய்வது இந்தக் கூட்டுக்குழுவின் நோக்கமாகும்.

பேச்சுவார்த்தைக்கான இலங்கைக்குழுவுக்கு - அமைச்சர்கள் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், ரவி கருணாநாயக்கா ஆகியோர் தலைமை தாங்கவுள்ளனர்.

அமெரிக்க தூதுக்குழுவுக்கு - அமெரிக்கத் தூதுவர் மற்றும் அமெரிக்க பிரதி வர்த்தகப் பிரதிநிதி ஆகியோர் தலைமை தாங்கவுள்ளனர்.

(க)

# மாநகரசபைக் காணியில் படைமுகாம்; மக்களின் குடியியல் உரிமைக்குப் பாதகம்!

## சி.வி.கே.சிவஞானம் அறிக்கை

யாழ்ப்பாண மாநகரசபைக்குச் சொந்தமான சில காணிகளின் இராணுவ முகாம்கள் அமைப்பதற்குக் கையளிக்குமாறு அரசாங்கம் மாநகர நிர்வகத்திற்கு விடுத்துள்ள பணிப்புரை மிகவும் கண்டிக்கத்தக்கதாகும்.

ஜனநாயகமுறையில் தெரிவு செய்யப்பட்ட சபையொன்று பதவியில் இல்லாத காலத்தில், இப்படியான நடவடிக்கையில் அரசாங்கமும், வடக்கு - கிழக்கு மாகாண சபை நிர்வாகமும் ஈடுபடுவது வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

நகரின் முக்கியமான பகுதியில் அதுவும் பொதுநூலகம் அமைந்துள்ள பகுதியில் இராணுவ முகாம் அமைப்பது எந்த விதத்திலும் எவராலும் நியாயப்படுத்த முடியாது. இந்த நடவடிக்கையானது மாநகர மக்களதும், யாழ். குடாநட்டு மக்களதும் குடியியல் உரிமைகளுக்குப் பாதகமானது.

இந்த நடவடிக்கையை முழுமையாக எதிர்ப்பதற்கான மேல் நடவடிக்கைகளை எடுக்கும்பொருட்டு, பல்துறை முக்கியஸ்தர்கள் பங்குபற்றும் கலந்துரையாடல் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது என முன்னாள் மாநகரசபை ஆணையாளா சி.வி.கே.சிவஞானம் விடுத்துள்ள பத்திரிகைக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பலப்படுத்தப்படும் நாவற்குழி முகாம்

நாவற்குழிச் சந்தியை அண்மித்துள்ள பகுதியில் இராணுவத்தினரின் படைமுகாம் பலப்படுத்தப்பட்டு வருகின்றது. முன்பு இப்படைமுகாம் - எதுவித பாதுகாப்பு வேலிகள், பதுங்குகுழிகள் இன்றி இருந்தது.

கடந்த சில தினங்களாகப் படையினர் முகாமைச் சுற்றியுள்ள பற்றைகளை அப்புறப்படுத்தி முட்கம்பி வேலிகளை அமைப்பதுடன், படை முகாமை விஸ்தரித்தும் வருகின்றனர். இதேபோல், நாவற்குழி பாலத்தில் அமைந்துள்ள படைமுகாமும் பலப்படுத்தப்பட்டு வருகின்றது.இதேவேளை, பாலத்தின் இரு மருங்கிலும் படையினர் முட்கம்பிவேலி அமைத்தும் வருகின்றனர்.

(108)

# நெல்லியடி சந்தையை இடமாற்றுவது புதிதாகத் தெரிவாகும் சபையே தீர்மானிக்கும்!

## பிரதேசசபை ஆலோசனைக் கூட்டத்தில் விசேட ஆணையாளர்

(யாழ்ப்பாணம்)

நெல்லியடிச் சந்தையை மீண்டும் பழைய இடத்தில் இயங்க வைக்க வேண்டுமென விடுக்கப்பட்ட கோரிக்கையை உடனடியாக நடைமுறைப்படுத்த முடியாதென வடமராட்சித் தெற்கு, மேற்குப் பிரதேச சபையின் விசேட ஆணையாளர் தெரிவித்தார்.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒரு சபையின் தீர்மானத்துக்கமைய இடம்மாற்றப்பட்ட சந்தையை, மீண்டும் பழைய இடத்துக்குக் கொண்டு செல்லவேண்டுமானால் புதிதாக மக்களால் தெரிவு செய்யப்படும் சபையே அதற்கான தீர்மானத்தை எடுக்கவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

அண்மையில் மேற்படி பிரதேச சபையின் ஆலோசனைக் கூட்டம் நடத்தப்பட்டபோதே, இது குறித்து கலந்துரையாடப்பட்டிருந்தது. இந்தக் கூட்டத்தில் சபையின் புதிய வேலைத்திட்டங்களுக்கான, திட்டங்கள் தயாரிப்பது குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

மேலும் வடமராட்சித் தெற்கு, மேற்குப் பிரதேசசபை எல்லைக்கு உட்பட்ட - ஏற்கனவே அமைக்கப்பட்ட வீதிகளுக்கு இரண்டாவது தடவையாகத் தார் ஊற்றுவதற்கும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் அரச, அரசசார்பற்ற அமைப்புக்களின் அதிகாரிகள், பொதுமக்கள், அரசியல் கட்சி பிரமுகர்களும் விடுதலைப்புலிகளின் அரசியற் துறையினரும் கலந்து கொண்டனர்.

(116)

# உள்ளூராட்சிமன்ற வீதிகளை வர்த்தமானியில் பிரசுரிக்க ஏற்பாடு

## அதன் பின்னரே புனரமைப்புப் பணி

(சரசாலை)

யாழ்.மாவட்டப் பிரதேசசபைகளின் எல்லைக்கு உட்பட்ட வீதிகள் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படவுள்ளதால், சகல உள்ளூராட்சி மன்றங்களிற்குட்பட்ட வீதிகளின் பெயர், எத்தனை கி.மீ. தூரம், அதன் தொடக்கம், முடிவு போன்ற விபரங்களைத் தமக்கு உடன் அனுப்பிவைக்கு மாறு யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி.வீ.கிருஷ்ண சாமி கேட்டுள்ளார்.

2003 ஆம் ஆண்டில் யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்து வீதிகளும் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டால் மட்டுமே, அவை மீள் புனரமைக்கவோ அல்லது திருத்த வேலைகளை மேற்கொள்ளவோ முடியும்.

எனவே, வடக்கு- கிழக்கு மாகாண ஆளுநரின் அங்கீகாரத்துடன் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படவுள்ள வீதிகளின் விபரங்கள் எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் தந்துதவுமாறு கேட்கப்பட்டுள்ளது.

## பருத்தித்துறை கூட்டுறவுச் சங்கத்திற்கு

# சீனி வழங்கப்படாததால் நிவாரணம் இடைநிறுத்தம்

தமது கிளைகள் ஊடாக விநியோகித்து வந்த நிவாரணப் பணிகளை பருத்தித்துறைக் கூட்டுறவுச் சங்கம் இடைநிறுத்தியுள்ளது.

2 ஆம் கட்ட மார்கழி மாத விநியோகத்திற்கான சீனியை, அரச செயலகம் இதுவரை வழங்காமையால் இவ்விநியோகப்பணி இடைநிறுத்தப்பட்டுள்ளது. இதனால் மீனவர் நிவாரணம், இடம்யர்ந்தோர் நிவாரணம், சமுர்த்தி நிவாரணம் போன்றவற்றைப் பெறுவோர் பாதிப்படைந்துள்ளனர்.

இதேவேளை, வடமராட்சிப் பகுதியின் ஏனைய சங்கப்பிரிவுகள், இநநிவாரண விநியோகத்தினை வழங்கி முடித்துவிட்டன. தை மாத நிவாரணப் பொருட்களைப் பெறுமாறு செயலகம் அறிவித்துள்ள போதும், அதற்குரிய சீனியும் செயலகத்தின் கையிருப்பில் இல்லையெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நெடுந்தீவு வெளிச்சவீட்டை திருத்துமாறு கோரிக்கை

நெடுந்தீவின் மாவிலித்துறை முகத்துக்கு அருகிலுள்ள வெளிச்சவீடு பல வருடங்களாகத் திருத்தப்படாமல், பழுதடைந்தநிலையில் இருப்பதால், அப்பகுதி மீனவர்கள் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகி வருகின்றனர்.

இரவு வேளைகளில் கடற்தொழிலில் ஈடுபடும் மீனவர்களும், போக்குவரத்துப் படகுகளும் தமது இருப்பிடத்தை அடைவதற்கு இவ் வெளிச்சவீடு உதவியாக இருந்ததாகவும், தற்போது வெளிச்சவீடு பழுதடைந்துள்ளதால், தாம் பெரும் சிரமத்துக்குள்ளாவதாகவும் மீனவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எனவே, சம்பந்தப்பட்டவர்கள் அதனைத் திருத்த துரித நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பகுதிப் பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

(100)

## மெய்வல்லுநர் போட்டி

(ஆனைக்கோட்டை)

ஆனைக்கோட்டை றோ.க. த.க பாடசாலை வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பாடசாலை அதிபர் அ. ஸ்ரீகாந்தன் தலை மையில் நடைபெறவுள்ளது. இந் நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப் பினர் நடராஜா ரவிராஜ் கலந்து கொள்வார்.

(46)

## நெடுந்தீவில் சமுர்த்தி வங்கி திறப்பு விழா

நெடுந்தீவுப் பிரதேச செயலகப் பிரிவுக்கான சமுர்த்தி வங்கிச் சங்கத் திறப்பு விழா இன்று காலை 11.30 மணிக்கு நடைபெறவுள்ளது. நெடுந்தீவுப் பிரதேசசெயலர் என். பேரானந்தன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பிரதம விருந்தினராக, யாழ்.மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதனும், சிறப்பு விருந்தினராக யாழ்.மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் சிவபாத சுந்தரமும் கலந்துகொள்ளவுள்ளனர்.

(113)

## இலவச யோகாசனப் பயற்சி

சங்கானை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இன்று தொடக்கம் 29 ஆம் திகதி சனிக்கிழமைவரை இலவச யோகாசனப் பயிற்சி வழங்கப்படவுள்ளது.

இப்பயிற்சி தினமும் பிற்பகல் 2.30 மணி தொடக்கம் மாலை 5.00 மணிவரை, தொடர்ந்து ஆறு தினங்கள் நடைபெறவுள்ளது. இப்பயிற்சியை இந்தியாவிலிருந்து வந்த மூவர் அடங்கிய குழு நடத்தவுள்ளது..

வலிகாமம் மேற்கு மக்களை இப்பயிற்சியில் கலந்து கொள்ளுமாறு உதவிப் பிரதேசசெயலர் மு.சிவராசா அழைத்துள்ளார்.

(118)

## இலவச தென்னங்கன்று விநியோகம்

அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் பணியாற்றும் ஊழியர்களுக்குக் கிளிநொச்சி மாவட்ட தென்னைப் பயிர்ச்செய்கை நிலையத்தால் தென்னங்கன்றுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

மூன்று வருடங்களில் பயன் தரக்கூடிய இந்தத் தென்னங்கன்றுகளைப் பராமரிப்பதற்கான படிமுறைகள் குறித்தும், தென்னைப பயிர்ச்செய்கை நிலையம் விளக்கமளித்து வருகின்றது.

கடந்த ஜனவரி, மற்றும் பெப்ரவரி மாதங்களில் இந்த நிலையத்தால் 11 ஆயிரம் தென்னங்கன்றுகள் இலவசமாக விநியோகிக்கப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

(108)

# குடாநாட்டுக் கிணறுகள் உவர் நீராக மாறும் ஆபத்து

யாழ்.மாவட்டத்திலேயுள்ள பல நன்னீர் கிணறுகள்- உவர்நீராக மாறி வருகின்றன. இதனால், யாழ்.குடாநாட்டில் நன்னீருக்குத் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக நீரியல் வள அதிகாரி ஒருவர் தெரித்தார்.

கிணறுகளிலிருந்து நீர் இறைக்கும் இயந்திரத்தின் உதவியுடன் மிகவிரைவாக நீரை வெளியேற்றுவதனாலும், தோட்டங்களிற்கு இரசாயனப் பசளை, இரசாயன மருந்துகள் போன்றவற்றைப் பயன்படுத்துவதனாலும் நன்னீர் கிணறுகள் உவர் நீராக மாறி வருகின்றது. கடற்கரையை அண்டிய பிரதேசங்களிலேயே தற்போது இந் நிலை ஏற்பட்டுள்ளது.

யாழ்.குடாநாடு முழுவதும் உவர் நீராக மாறுமுன், அதற்குரிய நடவடிக்கை எடுக்கவேண்டும். இல்லாவிடின் யாழ்.குடாநாட்டில் குடிநீருக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்படுமெனவும் அவ்வதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

(34)

# படங்களும் செய்திகளும்



யாழ்.சைவபரிபாலன சபையினரால், புண்ணிய நாச்சியம்மையார் தினத்தையொட்டி நடத்தப்பட்ட பண்ணிசைப் போட்டிப் பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட, கலாபூஷணம் கே. எஸ். ஆர். திருஞானசம்பந்தன் பண்ணிசைப் போட்டியில் கீழ்ப்பிரிவில் முதலாம் இடத்தைப் பெற்ற, யாழ்ப்பாணக் கல்லூரி மாணவி வைஷ்ணவி விக்கினேஸ்வரனுக்கு தங்கப் பதக்கம் அணிவித்துச் சான்றிதழ் வழங்குகிறார்.



சங்கானை மக்கள் வங்கிக் கிளையில் 'ஜயசிறி' சேமிப்புத் திட்ட அதிர்ஷ்ட இலாப நவம்பர் 2003 மாத சீட்டிழுப்பில் வெற்றி பெற்றவருக்கான பரிசை, சங்கானை பிரதேச செயலாளர் ந. சிவராசா வழங்குவதைப் படத்தில் காணலாம்.



வட இந்து மகளிர் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வைத்திய கலாநிதி சாவித்தி திருஞானசுந்தரம்பிள்ளை மங்கள விளக்கேற்றுவதையும் அருகில் கல்லூரி அதிபர் ஏ,கனகரத்தினம், யாழ். பல்கலைக்கழக வணிகத்துறை பீடாதிபதி எம். நடராஜசுந்தரம், வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் கே.வேணு கோபால் ஆகியோரையும் படத்தில் காணலாம்




# ஐ.சி.சி. உலகக் கிண்ணம் - 2003




## சாதனை வீரன் சச்சின்

சச்சின் ரமேஷ் டெண்டுல்கர் சர்வதேச கிரிக்கெட் உலகில் சாதனைகள் படைத்து வருவதென்பது ஒன்றும் ஆச்சரியமாகப் பேசப்பட வேண்டிய விடயம் அல்ல.

அவரது சாதனைப் பட்டியல் மிகவும் நீண்டது. இன்னமும் தொடர்ந்த நீளப்போவது. இந்நிலையில் இச்சாதனை வீரனின் தங்கக் கிரீடத்தில் இன்னொரு வைரம், அதுவும் கோஹினூர் வைரம் பதிக்கப் பட்டிருக்கிறது. ஆம், நடைபெற்று முடிந்த எட்டாவது உலகக் கிண்ணப் போட்டிகளின் ஆட்டத் தொடர் நாயகனாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார் சச்சின் டெண்டுல்கர். புள்ளிகளின் அடிப்படையில் பதினான்கு புள்ளிகள் பெற்று, ஆட்டத் தொடர் நாயகன் பந்தயத்தில் முதலிடம் பெற்றிருக்கிறார் இவர். இவரைத் தொடர்ந்து சௌரவ் கங்கூலி பத்துப் புள்ளிகளுடன் இரண்டாம் இடமும், சமிந்த வாஸ் ஒன்பது புள்ளிகளுடன் மூன்றாம் இடமும் பெறுகின்றனர். இம்முறை தென்னாபிரிக்காவில் நடைபெற்ற உலகக் கிண்ணப் போட்டிகளில், ஒரு சதம் மற்



பாய்ச்சல் தொடங்கியது 16 வயதினிலே

றும் ஆறு அரைச் சதங்கள் பெற்றவர் சச்சின்.

அரைச்சதங்கள் என்ற கணக்கில் 97, மற்றும் 98 ஓட்டங்கள் பெற்ற இரண்டு சந்தர்ப்பங்களும் அடங்கும். உலகக் கிண்ணப் போட்டித் தொடர் ஒன்றில் அதிகூடுதலான எண்ணிக்கையும், அத்தோடு உலகக் கிண்ண வரலாற்றில் ஜாவிட் மியான்டாட்டின் சாதனையை முறியடித்து அதிகூடுதல் ஓட்டம் பெற்றவர் என்ற பெருமையையும், பெறுகிறார். அலி பச்சார் கருத்துக் கூறுகையில், தென்னாபிரிக்க உலகக் கிண்ணப் போட்டிகளை மிகச் சிறப்பாகச் செய்ய உத்தேசித்திருந்தோம். சச்சின் தனது துடுப்பாட்டத்தின் மூலம் பல லட்சம் ரசிகர்களின் மனங்களைக் கவர்ந்து, ஆட்டத்தொடர் நாயகன் தெரிவுக்கு சரியான அர்த்தத்தைக் கொடுத்து விட்டார். இதனைப்பெற அவர் மிகவும் பொருத்தமானவர் என்கிறார். உலகக் கிண்ண இறுதிப்போட்டி முடிவடைந்த இவ்வேளையில், அதி உயர் விருதொன்று பெற்ற கிரிக்கெட் வீரரான சச்சின் டெண்டுல்கர் மிகவும் சந்தோஷமான மனிதனாக இருப்பார். கிரிக்கெட் ரசிகர்களின் வாழ்த்துக்கள் அவருக்கு எப்போதும் உண்டு.

-ஜோசப் கிருஷ்ணா-

ஒருநாள் ஆட்டங்கள் தடைப்படும்போதெல்லாம், குறிப்பாக மழையால் இந்தத் தடைகள் ஏற்படும் போதெல்லாம், சில கணிப்புகளை மேற்கொண்டு போட்டிகளைத் தொடர்ந்து நடத்தினார்கள். அல்லது வெற்றி தோல்விகளை நிர்ணயித்தார்கள். ஆனால், ஒவ்வொரு முறையிலும் பல குறைபாடுகள் காணப்பட்டதால் பல்வேறு தரப்பிலும் இருந்து அதிருப்திக் குரல்கள் எழுந்துகொண்டே இருந்தன. இதற்கு ஒரு மாற்றுவழி தேவை ஆட்டம் இடையில் நிறுத்தப்பட்டால் என்னவகையில் ஆட்ட முடிவைத் தீர்மானிக்கும் வழிமுறைகளை மேற்கொள்வதென்றெல்லாம் விளக்கம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

இதில் பிரதானமாகக் கவனிக்கப்பட வேண்டியது என்னவெனில், இம்முறைகள் பல்வேறு ஆய்வுகள், பரிசீலனைகள் எல்லாம் செய்து முடித்து இறுதி வடிவம் கொடுக்கப்பட்டமையாகும். மேலும் இந்த முறையை அறிமுகப்படுத்தியவர்களும் சாதாரணமானவர்கள் அல்ல. திரு.பிராங்க் டக்வேர்த், புள்ளி விபரத்துறையில்

## டக்வேர்த் லூயிஸ் முறை

என்ற வகையில் அறிமுகப்படுத்தப் பட்டதுதான் DUCKWORTH / LEWIS முறை. 1999 இல் இருந்து இந்த முறையைப் பின்பற்றிக் கொண்டு வருகிறார்கள்.

இந்த முறை பற்றிய பூரண விளக்கம் பெறுதல் என்பது திருவாளர்கள் டக்வேர்த்தும், லூயிஸூம் எழுதியுள்ள புத்தகத்தை வாசிப்பதன் மூலமே சாத்தியமானதாகும்.

இந்த முறையின் அடிப்படையில், இழக்கப்பட்ட விக்கெட்டுக்கள்- எஞ்சியுள்ள ஓவர்கள் என்ற அடிப்படை பின்பற்றப்படுகின்றது. இதற்கான அட்டவணை ஒன்றும் உள்ளது. இதன் பேரில் இரண்டாவது அணி துடுப்பெடுத்தாட முடியாது போனால், எவ்வகையில் தீர்மானிப்பது, இரண்டாவது இன்னிங்சில் ஆடும் அணியின் நிபுணராவார். இவர் றோயல் புள்ளி விபரச் சபையினால் வெளியிடப்படும் RSS NEWS எனும் சஞ்சிகையின் புள்ளிவிபரப் பகுதி ஆசிரியராவார். இதேவேளை திரு.டோனி லூயிஸ், வெஸ்ட் ஒவ் இங்லண்ட் பல்கலைக்கழகத்தில் கணினி மற்றும் கணிதத்துறை விரிவுரையாளராவார். இவர்கள் இருவரின் அரும் பெரும் ஆராய்ச்சியின் முடிவே, இன்று சர்வதேச ஒருநாள் ஆட்டங்களில் மழை வரும்போது தொடர்ந்து வரும் D/L கணிப்பு முறையாகும். இது தொடர்பில் எழுதப்பட்டுள்ள புத்தகத்தைப் பெற்றுக்கொள்வதாயின் வெஸ்ட் ஒவ் இங்லண்ட் சர்வகலாசாலையில் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

- சித்திரா

## இறுதியாட்டமும் - ஆரம்பமும்

உலகக் கிண்ண இறுதிப் போட்டியின் போது, கடந்த முறை அவுஸ்திரேலியா பாகிஸ்தான் கலந்து கொண்ட இறுதியாட்டம் ஞாபகத்



வெற்றி நமதே - சதமடித்த பொன்டிங்

துக்கு வந்தது. அந்த ஆட்டத்தில் பாகிஸ்தான் அணி எதிர்பார்த்தளவு தன் திறமையைக் காட்டமுடியாது போயிற்று என்பதுடன், ஆட்டமும் கூட ஒரு பக்கச்சார்பானதாகப் போய் விட்டிருந்தது. அதேபோல இம்முறை நடைபெற்ற இந்திய- அவுஸ்திரேலிய இறுதியாட்டமும் போய்விடக் கூடாது என்ற எதிர்பார்ப்பு, கிரிக்கெட் ரசிகர்கள் எல்லோரிடமும் இருந்தது.

ஆனால், எதிர்பார்ப்புக்கு மாறாகவே நிகழ்வுகள் நடந்துகொண்டிருந்தன. இந்திய அணித்தலைவர் TOSS வென்றும், ஏன் துடுப்பாட்டத்தை மேற்கொள்ளாமல் அவுஸ்திரேலியாவை துடுப்பெடுத்தாடக் கேட்டுக்கொண்டார் என்பது புரியாத புதிராகவே இருக்கின்றது. அதற்கான விலையைக் கங்கூலி கொடுக்க வேண்டியிருக்கும் என்பது, ஆட்ட ஆரம்பத்தில் இருந்தே தெளிவாகத் தெரிந்தது. எப்பொழுதுமே மிக நேர்த்தியாகப் பந்துவீசும் ஷாகிர்கான், முதல் ஓவரிலேயே தாறுமாறாகப் பந்துவீசியதற்கு நியாயபூர்வமான காரணம் எதுவும் கூற இயலவில்லை. 'முதற்கோணல் முற்றுங் கோணல்' என்பது போல, ஐம்பது ஓவர்களும் இந்தியாவிற்கு எந்தச் சாதக நிலைமையும் காட்டவில்லை என்பது உண்மை.

கில்கிறிஸ்ட் சன்னதம் கொண்டு ஆடியது, இந்திய அணியை முற்று முழுதாகக் குழப்பிவிட்டதென்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். அவரது அதிரடி, எந்தப் பந்துவீச்சாளரையும் நிதானிக்க விடவில்லை என்பதே உண்மை. அவருக்குச் சிறந்த துணையாக அமைந்தவர் மத்யூ ஹேடன். கில்கிறிஸ்ட் களத்தில் இறங்கி குளத்தைக் குழப்ப, குளம்பிய குட்டையில் மீன்பிடிப்பது போல, அவுஸ்திரேலிய அணித்தலைவர் ரிக்கி பொன்டிங், அந்த சந்தர்ப்பத்தை நன்றாகப் பயன்படுத்திக்கொண்டார். ரிக்கி பொன்டிங்குக்குத் துணை நின்றவர் டேமியன் மார்ட்டின். இறுதியில் அவுஸ்திரேலிய அணி ஆட்டத்தை முடிக்கும்போது, இரண்டே இரண்டு விக்கெட் இழப்பிற்கு 359 ஓட்டங்கள் என்ற நிலை காணப்பட்டது.

இதில் குறிப்பிடவேண்டியது, அணித்தலைவர் ரிக்கி பொன்டிங்கின் துடுப்பாட்டம், ஒரு அணித் தலைவராக அவர் அடித்த சதம் அற்புதமானது. மறுபுறம் இந்திய அணி தனது போராடும் சக்தி அவ்வளவையும் இழந்து, வெறும் பார்வையாளராக மைதானத்தில் நின்றது போலவே இருந்தது.

பின்னர் துடுப்பெடுத்தாடிய இந்திய அணியின் சச்சின், முதல் ஓவரில் ஆட்டமிழந்ததும் அணியின் நம்பிக்கை பறிபோனது. ஆயினும் ஏனையோர், ஓட்டச்சராசரி 6 ஐ அண்மித்ததாகவே (விக்கெட்டுக்கள் இழக்கப்பட்டுக் கொண்டிருந்த போதும்) இருக்கும்படியாக 234 ஓட்டம்வரை பெற்றமை தோல்வியிலும் ஒரு ஆறுதலாகவிருந்தது.

- நர்மதா -



விளாசிய மார்ட்டினும் (உள்ளே) - வீழ்ந்த சச்சினும்

## உலகக் கிண்ணக் கிரிக்கெட் - 2003

### அவுஸ்திரேலிய எதிர் இந்திய அணி - இறுதியாட்டம்

#### அவுஸ்திரேலிய அணி

| | | |
|---|---|---|
| கில்கிறிஸ்ட் | C ஷேவாக் b ஹர்பஜன் சிங் | 57 |
| ஹேடன் | C டிராவிட் b ஹர்பஜன் சிங் | 37 |
| பொன்டிங் | not out | 140 |
| மார்ட்டீன் | not out | 88 |
| உதிரிகள் | | 37 |
| மொத்தம் 2 விக்கெட் இழப்புக்கு (50 ஓவர்கள்) | | 359 |

#### பந்து வீச்சு - இந்திய அணி

| | O | M | R | W |
|---|---|---|---|---|
| ஷாஹிர்கான் | 7 | 0 | 67 | 0 |
| பரீநாத் | 10 | 0 | 87 | 0 |
| நெஹ்றா | 10 | 0 | 57 | 0 |
| ஹர்பஜன் | 8 | 0 | 49 | 2 |
| ஷேவாக் | 3 | 0 | 14 | 0 |
| டெண்டுல்கர் | 3 | 0 | 20 | 0 |
| மொங்கியா | 7 | 0 | 39 | 0 |
| யுவராஜ்சிங் | 2 | 0 | 12 | 0 |

அவுஸ்திரேலிய - இந்திய அணிகளுக்கிடையிலான இறுதி ஆட்டத்தில் அவுஸ்திரேலிய அணி 125 ஓட்டங்களால் வெற்றிபெற்று உலகக்கிண்ணத்தைத் தட்டிக்கொண்டது

#### இந்திய அணி

| | | |
|---|---|---|
| டெண்டுல்கர் | C&b மக்ரா | 04 |
| ஷேவாக் | run out | 82 |
| கங்கூலி | C லீமன் b பிரட் லீ | 24 |
| கைஃப் | C கில்கிறிஸ்ட் b மக்ரா | 00 |
| டிராவிட் | b பைக்கல் | 47 |
| யுவராஜ்சிங் | C பிரட் லீ b ஹொக் | 24 |
| மொங்கியா | C மாட்டீன் b சிமென்ஸ் | 12 |
| ஹர்பஜன் | C மக்ரா b சிமென்ஸ் | 07 |
| ஷாஹிர்கான் | C லீமன் b மக்ரா | 04 |
| பரீநாத் | b பிரட் லீ | 01 |
| நெஹ்றா | not out | 08 |
| உதிரிகள் | | 21 |
| சகல விக்கெட்டுக்களையும் இழந்து (39.2ஓவர்கள்) | | 234 |

#### பந்து வீச்சு - அவுஸ்திரேலிய அணி

| | O | M | R | W |
|---|---|---|---|---|
| மக்ரா | 8.2 | 0 | 52 | 3 |
| பிரட் லீ | 07 | 1 | 31 | 2 |
| ஹொக் | 10 | 0 | 61 | 1 |
| லீமன் | 02 | 0 | 18 | 0 |
| பைக்கல் | 10 | 0 | 57 | 1 |
| சிமென்ஸ் | 02 | 0 | 07 | 2 |

உலகக்கிண்ணக் கிரிக்கெட் - விளம்பர அனுசரணை

LG WORLD CUP 2003 Abans

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# முஸ்லிம்களுக்கு தனியான நிதியுதவி ஜப்பான் மாநாட்டில் வழங்கவேண்டும்

## அகாஷியிடம் ஹக்கீம் கோரிக்கை

ஜப்பானில் நடைபெறவுள்ள, இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் வட-கிழக்குப் பகுதி முஸ்லிம்களுக்கு தனியான நிதி ஒதுக்குமாறு, அமைச்சர் ரவூப் ஹக்கீம், ஜப்பானிய விசேட தூதுவர் யசுஷி அகாஷியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வட - கிழக்குப் பகுதி முஸ்லிம்களின் மீள் குடியமர்வு மற்றும் புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகளுக்கே தனியாக நிதி ஒதுக்குமாறு அமைச்சர் ரவூப் ஹக்கீம் அகாஷியிடம் கேட்டுள்ளார்.

இந்தச் சந்திப்பின் போது, பிரச்சினைகள் தொடர்பாக முஸ்லிம் காங்கிரசுக்கும், புலிகளுக்கும் இடையில் எதிர்வரும் ஜூன் மாதத்துக்கு முன்னர் இறுதியான உடன்பாட்டுக்குவர முடியும் என்றும் அகாஷியிடம் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

இதேவேளை, சர்வதேச மனித உரிமைகள் ஸ்தாபனத்தின் முன்னாள் தலைவர் இயன் மார்ட்டினையும், கனடிய சமஷ்டி அமைப்பு நிபுணர் பொப் ரேயையும் ஹக்கீம் தலைமையிலான முஸ்லிம் காங்கிரஸ் குழு சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளது.



பஸ்ராவுக்கு அருகே - அமெரிக்கர்களால் தலைசீவப்பட்ட நிலையில் கோரமாகக்கிடக்கும் ஈராக்கியப் படையினர் இருவரின் சடலங்கள்.

# குவைத்துக்கான பயணங்களை எயர் லங்கா இடை நிறுத்தியது

குவைத்துக்கான விமான சேவைகளை எயர்லங்கா நிறுவனம் இடைநிறுத்தியுள்ளது. ஈராக் மீதான தாக்குதலை அமெரிக்கப் படைகள் ஆரம்பித்ததையடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

குவைத்துக்கு வாரத்தில் ஐந்து சேவைகளை எயர் லங்கா நிறுவனம் நடத்தி வந்தது. தற்போது கொழும்பிலிருந்து இவ் விமானங்கள் டுபாய் விமான நிலையத்துக்கு மட்டுமே சேவையை நடத்துகின்றன.

இதேவேளை, முன்னர் மத்திய கிழக்கு ஊடாக ஐரோப்பாவுக்கு பயணங்களை மேற்கொண்டுவந்த விமானங்கள், போர் ஆரம்பித்துள்ளதால்- ரஷ்யா, வட ஆபிரிக்கா ஊடாகவே பயணங்களை மேற்கொண்டு வருவதாகவும், இதனால் விமானங்கள் நீண்ட தூரம் பயணம் செய்ய வேண்டியிருப்பதாகவும் எயர் லங்கா நிறுவனம் அறிவித்துள்ளது.

# குண்டுகளுடன் வீடு செல்ல முயன்ற சிப்பாய் பலாலி விமான நிலையத்தில் வைத்து கைது

(யாழ்ப்பாணம்)

கைக்குண்டுகள் மற்றும் துப்பாக்கி ரவைகளை விடுமுறையில் செல்லும் போது வீட்டுக்குக் கொண்டு செல்ல முற்பட்ட இராணுவச் சிப்பாய் ஒருவர், பலாலி விமான நிலையத்தில் வைத்து விமானப் படையின் விசேட பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது, பதுளையைச் சேர்ந்த முதியான சலாகே சமன்குமார (வயது 26) என்ற இராணுவச் சிப்பாய், நேற்று முன்தினம் காலை விடுமுறையில் செல்வதற்காக பலாலி விமான நிலையத்துக்குச் சென்றிருந்தார்.

அங்கு விமானப்படை விசேட பொலிஸார் சோதனையிட்டபோது, அவரிடம் இரண்டு கைக்குண்டுகளும், ரி 56 ரக துப்பாக்கிகளுக்கான 26 ரவைகளும், காஸ் லைற்றர்களும் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டன.

இதையடுத்து அவரைக் கைது செய்த விமானப்படைப் பொலிஸார், காங்கேசன்துறைப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். காங்கேசன்துறைப் பொலிஸார் மேற்படி இராணுவச் சிப்பாயை நேற்று முன்தினம் இரவு மல்லாகம் நீதிமன்ற நீதிபதி திருமதி சரோஜினி இளங்கோவன் முன்னிலையில் ஆஜர்படுத்தினர்.

இதையடுத்து ஆயுதங்களுடன் கைதான இராணுவச் சிப்பாயை, ஏப்ரல் 4 ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட நீதிவான், சான்றுப் பொருட்களான கைக்குண்டுகள் மற்றும் ரவைகளை மல்லாகம் நீதிமன்றத்தில் ஒப்படைக்குமாறும் பொலிஸாருக்குப் பணித்தார்.

# சகல உள்ளூராட்சி சபைகளிலும் ஐ.தே.கட்சி தனித்தே போட்டியிடும்

## அமைச்சர் மகேஸ்வரன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வட-கிழக்குப் பகுதிகளில் நடத்தப்படவுள்ள உள்ளூராட்சித் தேர்தலில், புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள சபைகள் உட்பட அனைத்து உள்ளூராட்சி சபைகளிலும் ஐ.தே.க தனித்துப் போட்டியிடவுள்ளதாக அமைச்சர் மகேஸ்வரன் தெரிவித்தார்.

உள்ளூராட்சித் தேர்தல்களில் போட்டியிடும் வேட்பாளர்களைத் தெரிவு செய்யும் நடவடிக்கைகள் விரைவில் எடுக்கப்படும். இந்தத் தேர்தல் பிரசாரத்துக்குத் தென்னிலங்கையிலிருந்து அமைச்சர்களை அழைத்து வரவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன், இறுதி மூன்று பிரசாரக் கூட்டங்களில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஐ.தே.க வேட்பாளர்களுக்கு ஆதரவாகப் பிரசாரம் செய்வார் என்றும் அமைச்சர் மகேஸ்வரன் மேலும் தெரிவித்தார்.

## நான்கு...

இந்தச் சடலங்களைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுப் பிரதிநிதிகள், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்குச் சென்று பார்வையிட்டு விசாரணை செய்திருந்தனர்.

சீன மீன்பிடிப் படகு, கடந்த வெள்ளிக்கிழமை மூழ்கடிக்கப்பட்ட சம்பவத்தில், 17 சீன மாலுமிகள் பலியானதாகத் தகவல் வெளியானது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, கரையொதுங்கிய மாலுமிகளின் சடலங்களை அடையாளங்காணுவதற்காக சீனத்தூதரக அதிகாரிகள் குழுவொன்று யாழ்ப்பாணம் வரவுள்ளதாக நேற்றுமாலை கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

இதேவேளை - முல்லைத்தீவுக் கடற்பரப்பில் சீனநாட்டு மீன்பிடிட்ரோலர் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக, முழுமையான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்று வெளிவிவகார அமைச்சர் ரிரோன் பெர்ணான்டோவை சீனத் தூதரகம் கேட்டுள்ளது.

சீனத் தூதரக உயரதிகாரி சாங் வெய் கூ, இது தொடர்பாக ரிரோன் பெர்ணான்டோவுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில், தமது நாட்டு மீன்பிடி ட்ரோலர் தாக்கப்பட்டதற்குக் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை - போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர், இச்சம்பவத்தில் பாதிக்கப்பட்ட சீன மாலுமிகளின் வாக்குமூலங்களைப் பதிவு செய்துள்ளதாகவும், விடுதலைப் புலிகளையும் சந்தித்துப் பேசவுள்ளதாகவும் கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் ரெய்ரூர் ரொகில்சன் தெரிவித்தார்.

## அமெரிக்காவுக்கு...

### போர்க்கைதிகள் பேட்டி ஐ.நாவுக்கு முரணானதாம்

தாம் பிடித்து வைத்துள்ள அமெரிக்கப் போர்க் கைதிகளின் பேட்டி- போர்க் கைதிகள் பற்றிய ஐ.நா. சாசனத்திற்கு முரணானது என அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் டொனால்ட் ரம்ஸ்.்.பீல்ட் தெரிவித்தார்.

கைதான சிப்பாய்கள்- தாம் தலைமையின் கட்டளைப்படியே ஈராக்கிற்குள் நுழைய நிர்ப்பந்தத்திற்குள்ளானதாகத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

### அமெரிக்கா கைப்பற்றிய இடத்தில் புதிய மோதல்

அமெரிக்கப் படைகள் தாம் கைப்பற்றியதாகத் தெரிவித்த துறைமுகப்பட்டினமான உம் காசீர் பகுதியில், மறைந்திருந்த ஈராக்கியப் படையினர் நேற்று திடீரென நுழைந்து அமெரிக்கப் படைகளைத் தாக்கினர்.

இவர்கள் ஈராக்கின் குடியரசு இராணுவ அணியைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

### ஒவ்வொரு அடியிலும் எதிர்ப்பு இருக்கும்

அமெரிக்கப் படைகள் முன்வைக்கும் ஒவ்வொரு முன்னேற்ற முயற்சியையும், ஈராக் கடுமையாக எதிர்க்கும் என அந்நாட்டு உப ஜனாதிபதி ராஹா யசீன் ரமடான் அறிவித்துள்ளார்.

பக்தாத்தில் நடந்த செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இப்படி கூறினார்.

அச் செய்தியாளர் மாநாட்டில் பேசிய ஈராக்கிய தகவல்துறை அமைச்சர் முஹமட் சயட் அல் - சகால், பஸ்ரா விமானத்தளத்தில் இருந்து புறப்பட்ட அமெரிக்கப் படையணிகளை ஈராக்கியப் படைகள் ஊடுருவித் தாக்கியதில் - நான்கு அமெரிக்கப் படையினர் கொல்லப்பட்டதாகவும் தெரிவித்தார்.

அங்கு பல அமெரிக்கப் படையினர் கைதிகளாகப் பிடிபட்டு அருகிலுள்ள ஐபாயிஷ் பகுதிக்கு கொண்டு செல்லப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

### காணாமற்போன பத்திரிகையாளர் மரணம்

இரு தினங்களுக்கு முன்னர் யுத்தம் நடக்கும் பகுதியிலிருந்து காணாமற்போனதாகக் கருதப்பட்ட பிரிட்டிஷ் ஐ.ரி.என். தொலைக்காட்சி சேவையின் செய்தியாளர் ரொரி லோயிட் மரணமடைந்து விட்டது உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது. பஸ்ரா நகரில் வைத்து இவர் காணாமற் போயிருந்தார்.

## வெளிநாட்டு ராணுவ...

தென்பகுதியில் பொய்யான தகவல்களையும், கருத்துக்களையும் வெளியிட்டு வருகின்றது.

இலங்கை அரசாங்கம் தனது படைகளைப் பலப்படுத்தத் திட்டமிட்டு வருகின்றது. படைகளுக்கென ஆயுதங்கள் கொள்வனவு செய்யப்பட்டு வருகின்றன. அமெரிக்காவும், அரசாங்கமும் பயிற்சியை வழங்கி வருகின்றன. இந்த நிலையில், இராணுவச்சமநிலை எப்படிச்சாத்தியமாகும்.

ஜே.வி.பி., பொ.ஐ.முவுடன் இணைந்து அமைதி முயற்சிகளை எதிர்த்து வருகின்றது. மக்களுக்கு ஜனாதிபதி சந்திரிகா எந்தத் தோற்றப்பாட்டைக் காட்டினாலும் அவர் அமைதிமுயற்சிகளை எதிர்க்கின்றார் என்பது நிரூபணமாகின்றது. ஜே.வி.பிக்கு மார்க்சியம் குறித்த எந்த தத்துவார்த்தக் கருத்துமே கிடையாது.

ஜனாதிபதி சந்திரிகா இரட்டை நாக்குடன் பேசவில்லை. அவர் மூன்று நாக்குகளுடன்தான் பேசுகிறார்.

வட-கிழக்குப் பகுதிகளில் உள்ளூராட்சித் தேர்தலில் ஈ.பி.டி.பியின் டக்ளஸ் தேவானந்தா தற் துணிவிருந்தால் போட்டியிடலாம் என்றும் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் கொழும்புச் செய்தியாளர் லசந்த விக்கிரமதுங்கவுக்கு வழங்கிய பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

## உலகக்கிண்ண...

திரேலிய வீரர்கள் இந்திய அணியின் பந்து வீச்சாளர்களைத் திணறடிக்கும் வகையில் பந்துகளை விளாசித்தள்ளினர்.

கில் கிறிஸ்ட், ஹேடன் ஆகியோரின் விக்கெட்டுக்களை ஹர்பஜன் சிங் வீழ்த்திய போதும், அதற்குப் பின்னர் இந்திய அணியால் எந்த விக்கெட்டுக்களையும் வீழ்த்த முடியவில்லை. பொன்டிங் ஆட்டமிழக்காமல் 121 பந்துகளில் - 4 பவுண்டரிகள், எட்டு சிக்ஸர்கள் அடங்கலாக 140 ஓட்டங்களைப் பெற்றார்.

இவருடன் ஜோடி சேர்ந்த மார்ட்டீன் ஆட்டமிழக்காமல் 84 பந்துகளில் 7 பவுண்டரிகள் 1 சிக்ஸருடன் 88 ஓட்டங்களைக் குவித்தார்.

இதன் மூலம் அவுஸ்திரேலிய அணி 50 ஓவர்கள் நிறைவில் 359 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடத் தொடங்கிய இந்திய அணியின் நம்பிக்கை நட்சத்திரம் டெண்டுல்கர், இரண்டாவது நிமிடத்தில் 4 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து சென்றார். இந்திய அணியின் விக்கெட்டுகள் தொடர்ச்சியாக வீழ்ந்து கொண்டிருந்தபோதும் வீரேந்தர் ஷேவாக், யுவராஜ்சிங் ஆகியோர் பொறுப்புடன் ஆடியதால் ஓரளவுக்கு ஓட்ட விகிதத்தை உயர்த்த முடிந்தது.

எனினும், 39.2 ஓவர்களில் 234 ஓட்டங்களை மட்டும் பெற்று இந்திய அணி தோல்விகண்டது. இறுதியாட்டத்தில் வெற்றி பெற்ற அவுஸ்திரேலியா தொடர்ந்து இரண்டாவது தடவையாகவும் உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றியுள்ளது.

இந்தப் போட்டியின் தொடர் ஆட்டநாயகனாக, 669 ஓட்டங்களைப் பெற்ற இந்திய அணிவீரர் சச்சின் டெண்டுல்கர் தெரிவு செய்யப்பட்டார்.

## ஐந்து சந்திப்...

போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். இதையடுத்து அப்பகுதியில் தீவிர பொலிஸ் பாதுகாப்பும் வழங்கப்பட்டிருந்தது.

நேற்று அப்பகுதியில் அமைதி நிலவியதுடன் முறுகலைத் தவிர்க்கும் முயற்சிகளில் அமைச்சர் மகேஸ்வரன் நேரடியாக ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## வலயக் கல்வி...

தொண்டர் ஆசிரியர் சங்கம் கேட்டுள்ளது.

மாணவர்களின் கல்விவளர்ச்சிக்கு கடந்த காலங்களில் பெரிதும் துணையாக இருந்த தொண்டராசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப் பின்னடிப்பது மாணவர்களின் கல்வி வளர்ச்சியை மேலும் தடுக்கும் செயல் என்றும்,

மனிதாபிமான அடிப்படையில் தொண்டராசிரியர்களுக்கு நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்குமாறும் வடமாகாண அதிபர்கள் சங்கம் கல்வி அமைச்சுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பிரதி சபாநாயகர்...

பிரதி சபாநாயகர் பதவியை நான் பெற்றுக்கொள்ளக் கூடாது என ரெலோ முதல்வர் கூறினார். அவர் எமது கட்சியின் விடயத்தில் தலையிட அனுமதிக்கமுடியாது. நான் 32 ஆயிரம் வாக்குகள் பெற்று மக்கள் பிரதிநிதியாக நாடாளுடன்றம் சென்றுள்ளேன்.

அரசியலிலே தந்தை செல்வாவுடன் ஒன்றாக இருந்தவன் நான். ஏன் எனக்கு அப்பதவிக்கு தகுதியில்லையா? இது சம்பந்தமாக எமது கட்சி உறுப்பினர்களுடன் கூடி ஆராய்ந்து ஓர் முடிவை எடுக்கவுள்ளோம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இக் கூட்டத்தில் பேசிய நடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ்- தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இணைந்துள்ள ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ். ஆகிய கட்சிகள் இன்றும் அரசிடம் நிதி பெற்றுக்கொண்டிருக்கின்றனர்.

இந்தக் கூட்டமைப்பில் அவர்கள் இணைய-முன் அரசிடமிருந்து நிதி பெறமாட்டோம் எனக் கூறினார்கள். ஆனால், இன்று அவற்றிற்கு மாறாக செயற்படுகிறார்கள். அதைவிட்டுவிட்டு எமது கட்சி பற்றிப் பேசுவதற்கு அவர்களுக்கு அருகதையில்லை எனத் தெரிவித்தார்.

கணினி பக்க வடிவமைப்பாளர் தேவை

CORCEL DRAW, PAGE MAKER இல்
அனுபவமுள்ள கணினி பக்க வடிவமைப்பாளர்கள்
எதிர்வரும் 30-03-2003 இற்கு முன்னதாக அலுவலக நேரத்தில் பொது முகாமையாளரை நேரில் வந்து சந்திக்கவும்.

கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

நிர்வாக இயக்குநர்,
நமது ஈழநாடு.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 24.03.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.